

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 95 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 28 – செவ்வாய்க்கிழமை 14 நவம்பர் 2023 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 95 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 28 - Tuesday 14 November 2023 - Dak 8 Pages ₹ 5.00


### “தூத்துக்குடி மக்களின் தந்தை” என போற்றப்பட்ட

# ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

**சென்னை, நவ. 14-**

**தூத்துக்குடி மாநகரின் தந்தை ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு ரூ.77.87 இலட்சம் மதிப்பீட்டில் குவிமாடத்துடன் கூடிய திருவுருவச் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (14.11.2023) காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கிறார்**



இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்கள் தூத்துக்குடியில் 15.11.1869 அன்று பிறந்தார். அறிவுத் திறமையும், அறிவுக் கூர்மையும் கொண்டவர். உழைப்பால் உயர்ந்தவர். ஈடுபடும் செயலில் இடர்களும் தடைகளும் தொடர்ந்தாலும், அச்செயல் பலருக்கு பயன்படும் எனில், அதனை செய்து முடித்து வெற்றி காணும் மன உறுதி கொண்டவர் அவர்.

**ஐந்து முறை நகராட்சித் தலைவர்!**

தூத்துக்குடி நகராட்சி தலைவராக 21.12.1909-இல் பொறுப்பேற்ற ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்கள் மக்களின் பேராதரவுடன் ஐந்து முறை தொடர்ந்து நகராட்சி மன்றத் தலைவராக விளங்கியுள்ளார். கடற்கரை நகரமான தூத்துக்குடி நீண்ட நெடுங்காலமாகவே குடிநீர் பிரச்சினையால் சிரமப்பட்டு வந்துள்ளது. 1927ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் மிகக் கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்பட்ட போது மிகுந்த தொலை நோக்குப் பார்வையுடன், நெல்லை தாமிரபரணி ஆற்றிலிருந்து குழாய் மூலம் நீர் கொண்டு வரும் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி, மக்களின் பாராட்டினை பெற்றார்.

**தமிழக அரசு அரசாணை!**

இந்தக் குடிநீர்ப் பிரச்சினைகள் தீர்ந்தது மட்டுமல்லாமல் நகரின் பல வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றியதனால் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்கள் “தூத்துக்குடி மக்களின் தந்தை” என போற்றப்படுகிறார்.



இத்தகைய மாமனிதர் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களைப் போற்றும் வகையில் அவருக்கு தூத்துக்குடி மாநகராட்சியில் குவிமாடத்துடன் கூடிய முழு உருவச் சிலை அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசால் 13.11.2021 அன்று அறிவிக்கப்பட்டு, 14.10.2022 அன்று உரிய அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு அரசின் சார்பில் தூத்துக்குடி மாநகராட்சி பூங்காவில் 77.87 இலட்சம் ரூபாய் செலவில் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு குவிமாடத்துடன் கூடிய திருவுருவச் சிலையினை இன்று (14.11.2023) காலை 11.30 மணியளவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கிறார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## உலக மக்கள் தொகை 800 கோடியை தாண்டியது!

### மக்களின் சராசரி வயதும் 32 ஆக அதிகரிப்பு!

*வாஷிங்டன், நவ. 14-*

*உலக மக்கள் தொகை 800 கோடியை தாண்டி விட்டதாக அமெரிக்காவின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மையம் தெரிவித்துள்ளது. கடந்த 2000வது ஆண்டில் உலக மக்கள் தொகை 600 கோடியாக இருந்த நிலையில், 23 ஆண்டுகளில் 200 கோடி அதிகரித்துள்ளது. மக்களின் சராசரி வயது தற்போது 32 ஆக உள்ளதாகவும் இவை 2060ம் ஆண்டில் 39 வயதாகவும் உயரும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. கடந்த 1960வது ஆண்டில் இருந்து 2000ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 2 மடங்காக இருந்த நிலையில், தற்போது அவை குறைந்துள்ளது.*

*பெண்கள் கருவூரும் விகிதம் தொடர்ச்சியாக குறைந்து வருவதே இதற்கு காரணம் என கணக்கெடுப்பு மையம் கூறியுள்ளது. உலகிலேயே மக்கள் தொகை அதிகம் உள்ள நகரங்களின் பட்டியலில் ஜப்பான்நாட்டின்டோக்கியோ முதல் இடம் பிடித்துள்ளது. டோக்கியோவின் மக்கள் தொகை 3,71,94,105 ஆக உள்ளது. பட்டியலில் டெல்லி 3,29,41,309 மக்கள் தொகையுடன் 2ம் இடத்திலும் சீனாவின் ஷாங்காய் 2,92,10,808 3ம் இடத்திலும் உள்ளது. 2,12,96,517 பேருடன் மும்பை 9வது இடத்திலும் 1,53,32,793 பேருடன் கொல்கத்தா 17வது இடத்திலும் 1,36,07,800 பெங்களூரு 23வது இடத்திலும் 1,17,76,147 சென்னை 26வது இடத்திலும் உள்ளன.*

## ஒரு லட்சம் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு!

### தைவான் அரசு முடிவு!

சென்னை, நவ. 14 –

ஒரு லட்சம் இந்தியர்களை வேலைக்கு அமர்த்த தைவான் அரசு முடிவு செய்துள்ளதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

டிசம்பர் மாத தொடக்கத்தில் தொழிற்சாலைகள், பண்ணைகள், மருத்துவம் உட்பட பல்வேறு துறைகளில் குறைந்த பட்சம் 1 லட்சம் இந்திய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த தைவான் அரசு திட்டமிட்டுள்ளதாக ப்ளூம்பெர்க் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வரும் டிசம்பர் மாதத்தில் இந்தியா – தைவான் இடையே ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாக இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, தைவான் இடையிலான வேலை வாய்ப்பு ஒப்பந்தம், அதன் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தையில் இருப்பதாக வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் அறிந்தம் பாக்ஷியும் உறுதிப்படுத்தி உள்ளதாக கூறப்படுகிறது.

### இந்தியா முழுவதும்

## மக்களாட்சி சகாப்தத்தை தொடங்குவதற்கான நேரம் இது!

### ராகுல் காந்தி வீடியோ பதிவு வெளியீடு!

*புதுடெல்லி, நவ. 14-*



*நாடு முழுவதும் மீண்டும் மக்களை மையமாகக் கொண்ட ஆட்சியின் சகாப்தத்தை தொடங்கும் நேரம் இது’ என காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தனது வீடியோ பதிவில் கூறி உள்ளார். தெலங்கானாவில் சட்டப்பேரவை நடைபெற உள்ள நிலையில், கடந்த 2020ம் ஆண்டு கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொண்ட விவசாயி ஒருவரின் வீட்டிற்கு ராகுல் காந்தி சமீபத்தில் சென்றிருந்தார். அந்த வீடியோவை தனது யூடியூப் பக்கத்தில் வெளியிட்டு ராகுல் காந்தி கூறியிருப்பதாவது:*

*‘மிக முக்கியமாக ஒலிக்க வேண்டிய குரல், வரிசையின் கடைசியில் இருக்கிறது’ என மகாத்மா காந்தி கூறி உள்ளார். கும்மரி சந்திரய்யாவின் குரலும் அப்படிப்பட்டது.*

*இவர் தெலங்கானாவை சேர்ந்த சிறு விவசாயி. அன்றாட வாழ்க்கைக்கே போராடிய அவர், கடன் சுமையால் தற்கொலை செய்து கொண்டார். தனது அன்பான குடும்பத்தை விட்டுச் சென்று விட்டார். இவரை காப்பாற்றுவதில் பிஆர்எஸ் அரசு தோல்வி அடைந்து விட்டது. சரியான நேரத்தில் அரசு உதவியிருந்தால், கும்மரி சந்திரய்யா இன்று உயிருடன் இருந்திருப்பார். ஆனால், சர்வாதிகார எண்ணம் கொண்ட பி.ஆர்.எஸ், பா.ஜ. போன்ற கட்சிகளால் மக்களின் தேவைகளை வழங்க இயலாது. இந்த விஷயத்தில் காங்கிரசால் நிச்சயம் மாற்றத்தை கொண்டு வர முடியும். வரிசையில் கடைசியாக நிற்கும் கோடிக்கணக்கான குரல்களின் ஆசைகள் தேவைகளின் வெளிப்பாடுதான் காங்கிரசின் தேர்தல் உத்தரவாதங்கள்.*

*கும்மரி திருப்பத்தமா இன்னமும் தனது குடும்பம் கடன் சுமையால் போராடுவதாக கூறினார். இந்த நிலை மிக விரைவில் மாறும். மக்களை மையமாக கொண்ட காங்கிரஸ் அரசு மகாலட்சுமி திட்டத்தின் கீழ் பெண்களுக்கு மாதம் ரூ.2,500 நிதி உதவி, இலவச பஸ் பயணம், ரூ.500க்கு காஸ் சிலிண்டர் வழங்கும். விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.15,000, விவசாய தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ரூ.12,000 வழங்கும். நமது அனைத்து தரப்பு மக்களுக்கும் நியாயத்தை உறுதி செய்வதே எங்களின் இப்போதைய யுத்தம். இந்தியா முழுவதும் மீண்டும் மக்களை மையமாக கொண்ட ஆட்சியின் சகாப்தத்தை தொடங்கும் நேரம் இது. இவ்வாறு ராகுல் கூறி உள்ளார்.*

### கனடாவில் பயங்கரம்!

## சீக்கியர் - 11 வயது மகன் சுட்டுக்கொலை!

ஒட்டாவா, நவ. 14–

கனடாவில் சீக்கியரும், அவரது 11 வயது மகனும் பட்டப்பகலில் சுட்டு கொல்லப்பட்டனர். கனடாவில் உள்ள எட்மன்டன் நகரில் வசித்து வந்தவர் ஹர்ப்ரீத் சிங் உப்பால்(41). நேற்றுமுன்தினம் ஹர்பிரீத் சிங் மற்றும் அவரது 11 வயது மகன் காஸ் நிலையத்துக்கு வெளியே காரில் அமர்ந்திருந்தனர்.

அப்போது, அவரது காரை பின் தொடர்ந்து வந்த மர்மநபர்கள் காரை நோக்கி சரமாரியாக சுட்டனர். இதில் ஹர்பிரீத் சிங், அவரது 11 வயது மகன் கொல்லப்பட்டனர்.

பின்சீட்டில் அமர்ந்திருந்த ஹர்பிரீத்சிங் மகனின் நண்பன் காயம் எதுவுமின்றி தப்பினான். ரவுடி கும்பல்களுக்கு இடையேயான மோதலின் விளைவாக இந்த சம்பவம் நடந்துள்ளதாக கூறப்படுகிறது.

இது பற்றி எட்மன்டன் போலீஸ் அதிகாரி கூறுகையில்,“ சுட்டு கொல்லப்பட்ட ஹர்பிரீத்சிங் எட்மன்டன் நகரில் குற்ற செயல்களில் ஈடுபடும் கும்பலை சேர்ந்தவர். அவரை சுட்டு கொன்றவர் யார் என்பது தெரியவில்லை. யாரும் கைது செய்யப்படவில்லை” என்றார்.

போலீஸ் வட்டாரங்கள் கூறுகையில்,“ ரவுடி கோஷ்டிகள் இடையேயான மோதலில் அவர் சுட்டு கொல்லப்பட்டுள்ளார். 3நாட்களுக்கு முன் பரம்வீர் சாகில் என்ற ரவுடி சுட்டு கொல்லப்பட்டார். அந்த கொலைக்கும் இதற்கும் தொடர்பு உள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளன.

### முதல்வரின் மகளிர் இலவசப் பேருந்துப் பயணத் திட்டம்!

# பெருமளவு பணம் மிச்சம்!

## கருத்துக் கேட்பில் பெண்கள் தகவல்!

**சென்னை, நவ.14-**

**தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு மகளிருக்கு இலவச பேருந்துப் பயணம் என்ற புரட்சிகரமான திட்டத்தை அறிவித்து செயல்படுத்தியது. முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த இந்த முன்னோடி திட்டத்தை வட மாநிலங்களிலும் செயல்படுத்த தொடங்கி இருக்கிறார்கள். இந்தத் திட்டம் தமிழகம் முழுவதும் பெண்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பு பெற்றுள்ளது.**

இந்த நிலையில், ‘என்ன நினைக்கிறார்கள் சென்னை பெண்கள்’ என சென்னை மாநகராட்சி ஒரு ஆய்வை நடத்தி இருக்கிறது. சென்னை முழுவதும் 3 ஆயிரம் பேரிடம் இந்த கருத்துக் கேட்பு நடத்தப்பட்டுள்ளது. இதில் 2,432 பேர் பெண்கள், 568 பேர் ஆண்கள். இதுதவிர நூறு திருநங்கைகளும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இவர்களிடம் நடத்திய கருத்துக் கணிப்பில் 89 சதவீத பெண்கள் போக்குவரத்துக்கு அரசு பேருந்தை மட்டுமே நம்பி இருக்கிறார்கள் என்பது தெரிந்தது. இதில் 82 சதவீதம் பேர் அரசு வழங்கியிருக்கும் இலவச பேருந்து பயணத்தின் மூலம் பெருமளவு பணம் மிச்சப்படுவதாக மகிழ்ச்சி தெரிவித்து உள்ளனர்.

**பெண்களுக்கு உதவும் ரோந்து வாகனம்!**

பஸ் பயணத்தின்போது பாலியல் தொந்தரவுக்கு உள்ளானவர்களில் 62 சதவீதம் பேர் துணிச்சலாக தட்டி கேட்டதாகவும் ஆனால் பொதுமக்கள் தரப்பில் ஒருவர் கூட உதவிக்கு முன் வரவில்லை என்றும் ஆதங்கப்பட்டனர்.




ஆனால் இது பற்றி மாநகராட்சி அதிகாரிகள் கூறும்போது, பெண்களுக்கான பாதுகாப்பு வசதிகள் என்னென்ன இருக்கிறது என்பது பற்றி 62% பெண்களுக்கு எதுவுமே தெரியவில்லை. 32 சதவீதம் பெண்களுக்கு மட்டுமே காவலன் செயலியை பற்றிய புரிதல் இருக்கிறது. 10 சதவீதம் பேர் பெண்களுக்கு உதவுவதற்கான பெண்கள் போலீஸ் ரோந்து வாகனத்தை பற்றி அறிந்திருக்கிறார்கள். 29 சதவீத பெண்கள் மாநகர பஸ்களில் அவசர உதவிக்கு வைக்கப்பட்டிருக்கும் பொத்தான் பற்றி தெரிந்து வைத்துள்ளார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

இந்த ஆய்வு அறிக்கையை வெளியிட்டு மேயர் பிரியா கூறும்போது, “பஸ் பயணம் செய்யும் பெண்கள் என்னென்ன பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். உங்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று அறிந்து கொள்வதற்காகவே இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இதன் மூலம் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் மாநகரப் போக்குவரத்து கழகத்திற்கு பரிந்துரைகள் செய்யப்படும், அடிக்கடி பஸ்களை இயக்க வேண்டும். பெண்களுக்காகவே பஸ்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அவசரகால பொத்தான் பற்றிய விழிப்புணர்வை பெண் பயணிகளிடம் ஏற்படுத்த வேண்டும். மேலும் 10 சதவீத பெண்கள் இதே போல் பாலியல் ரீதியான தொந்தரவுகள் பஸ்களில் மட்டுமல்ல மெட்ரோ ரெயிலில் கூட நடப்பதாக தெரிவித்து உள்ளார்கள்” என்றார்.

**நாட்டிலேயே பாதுகாப்பான நகரம் சென்னை!**

சென்னை போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் கூறும்போது, “நாட்டிலேயே பாதுகாப்பான நகரம் சென்னை என்பது பல்வேறு ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது. அதேபோல் தமிழகத்தில் தான் அதிகமான பெண் போலீஸ் நிலையங்களும் உள்ளன. இந்த போலீஸ் நிலையங்கள் மூலம் பெண்களுக்கு பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்து உள்ளது. கவுன்சிலிங்கும் கொடுக்கப்படுகிறது. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத பகுதி என்று தெரியவரும் இடங்களில் கூடுதலான ரோந்து பணிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன” என்றார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 14-11-2023

# ஆளுநர்கள் தலையில் இடி - 1

ஆளுநர்கள் தலையில் இடியை இறக்கி இருக்கிறது உச்சநீதிமன்றம். ஆளுநர்களை வைத்து நரித்தந்திர நாடகங்களை நடத்தி வரும் பா.ஜ.க. அரசுக்கும் சேர்த்துத்தான் இது இடியாக அமைந்திருக்கிறது.

**அரசியல் சாசனம் வழங்கியுள்ள அதிகாரத்தை ஆளுநர் ஆர்.என்.ரவி தவறாக பயன்படுத்தி வருவதாக உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு குற்றஞ்சாட்டியது. அரசின் மசோதாக்கள் மற்றும் தீர்மானங்களுக்கு உரிய நேரத்தில் ஒப்புதல் கொடுக்காமல் ஆளுநர் கிடப்பில் போடுவதால் அரசுப் பணிகள் முடங்குவதாகவும் வாதிடப்பட்டது. சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட 12 மசோதாக்கள், 4 நடவடிக்கை உத்தரவுகள், 54 கைதிகளின் முன்கூட்டி விடுதலை தொடர்பான கோப்புகள் உள்ளிட்டவை ஆளுநர் ஆர்.என்.ரவியால் முடக்கப்பட்டிருப்பதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு இத்தகைய வழக்கை தொடர்ந்தது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, இறுதியாக உச்சநீதி மன்றத்தின் கதவைத் தட்டி இருக்கிறது தமிழ்நாடு அரசு.**

ஆளுநராக ஆர்.என்.ரவி வந்தது முதல் கொடுத்து வரும் குடைச்சல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர் பொதுவெளியில் சனாதனக் காவலராகவும், வர்ணாசிரம வழிகாட்டியாகவும், தத்துவார்த்த மேதையாகவும் தன்னைக் காட்டிக் கொள்ளச் செய்து கொள்ளும் உளறல்கள் ஒதுக்கித் தள்ளத்தக்கவை. இவை காலம் காலமாக சமூகநீதிக்கு எதிரான வகுப்புவாத சக்திகளால் நாம் கேட்டு வரும் பரப்புரைகள்தான். இதுவரைச் சொல்லிச் சொல்லி தோற்ற கருத்துகளை, கடைசியாகக் கிடைத்திருக்கும் கிண்டிவாலா வாயில் போட்டுச் சொல்லச் சொல்லி பத்திரிகைகளில் வர வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். சொல்லித் தொலைப்பவர் கவர்னர் என்பதால், நாமும் பதில் சொல்லித் தொலைக்க வேண்டி இருக்கிறது. இது போல நிர்வாக விவகாரங்களில் இருக்க முடியாது அல்லவா?

அரசாங்கத்தின் சார்பில் எழுதிக் கொடுத்த உரையைத்தான் ஆளுநர் என்பவர் அவையில் வாசிக்க வேண்டும். ஆனால் அந்த உரையையே திருத்தி வாசித்தார் ஆளுநர் ரவி. சொன்னதைச் சொல்லாமலும், சொல்லாததை சேர்த்தும் சபையின் மாண்பைக் குலைக்கும் உரையை வாசித்தார் ஆளுநர் ரவி. உடனடியாக, அதே இடத்திலேயே, தீர்மானத்தைக் கொண்டுவந்து - அவர் வாசித்த உரையை நிராகரித்து - அரசால் வழங்கப்பட்ட உரையே அவைக் குறிப்பில் இடம் பெறும் என்று சொல்லி - சபையின் மாண்பைக் காட்டினார் முதலமைச்சர் அவர்கள்.

**“சமூகநீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, மதநல்லிணக்கம், பல்லுயிர் ஓம்புதல் ஆகிய கொள்கைகள் இவ்வரசின் அடித்தளமாக அமைந்துள்ளன. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி, பார்போற்றும் திராவிட மாடல் ஆட்சியை இந்த அரசு வழங்கி வருகின்றது” என்பதையே விட்டுவிட்டு படித்தார் ஆளுநர். அதனால்தான் அவரது உரையை அந்த இடத்திலேயே நிராகரிக்கும் தீர்மானத்தை முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள்.**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் உருவாக்கி நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதாக்களுக்கு ஏன் அனுமதி தரவில்லை என்பதற்கு ஆணவமாக பதில் சொன்னார் ஆளுநர் ரவி. ‘கிடப்பில் இருந்தாலே நிராகரிக்கப்பட்டதாகவே அர்த்தம். நீண்ட நாட்களாக கிடப்பில் வைக்கப்பட்டுள்ள மசோதாக்கள் நிராகரிக்கப்பட்டதாகவே அர்த்தம். வார்த்தை அலங்காரத்துக்காக அதனை நிறுத்தி வைப்பு என்கிறோம்’ என்று பொதுவெளியில் பேசினார் ஆளுநர் ரவி. பதவிப் பிரமாணம், ரகசியக் காப்புப் பிரமாணங்களுக்கான அர்த்தம் தெரியாதவரிடம் யார் சொல்லி புரிய வைப்பது?

அதனால்தான் உச்சநீதிமன்றம் போனது தமிழ்நாடு அரசு.

மாநில பல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கும் மசோதா, தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவது தொடர்பான மசோதா, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக துணை வேந்தரை தமிழ்நாடு அரசே நியமிக்க அதிகாரம் அளிக்கும் மசோதா உள்ளிட்டவற்றை ஆளுநர் ஆர்.என்.ரவி கிடப்பில் போட்டுள்ளார்.

ஏதோ மகா யோக்கியரைப் போல வேடம் போட்டு வரும் இந்த ஆளுநர்தான், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி.ரமணா மீதான குட்கா ஊழல் வழக்கில் நீதிமன்ற விசாரணையை தொடங்க சி.பி.ஐ. கோரிய அனுமதிக்கான கோப்புகளிலும் கையெழுத்திடாமல் உள்ளார். அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கே.சி.வீரமணி, எம்.ஆர். விஜயபாஸ்கர் மீது நீதிமன்ற விசாரணையை தொடங்கிட ஊழல் தடுப்பு, கண்காணிப்பு இயக்குநரகம் இசைவு ஆணை கோரிய கோப்பிலும் ஆளுநர் கையெழுத்திடாமல் உள்ளார். இவை அனைத்துமே சட்டமீறல்கள் ஆகும். சட்டசபை மாண்புமீறல்கள் ஆகும். அவரது பதவிக்கான அதிகார மீறல்கள் ஆகும்.

**‘அரசின் கோப்புகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் வேண்டுமென்றே காலதாமதப்படுத்துவது சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும்’ என்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தி இருந்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக செயல்படுவதன் மூலம், தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை ஆளுநர் ஆர்.என்.ரவி பறித்து வருவதாகவும் குற்றம்சாட்டப்பட்டது.**

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநருக்கு காலக்கெடு விதிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு உச்சநீதி மன்றத்தில் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா மற்றும் மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணை நடைபெற்று வருகிறது.

**- தொடரும்**

## கும்பக்கரை அருவியில் 11வது நாளாக சுற்றுலாப் பயணிகள் குளிக்கத் தடை..!

*தேனி, நவ. 14 -*

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே பிரசித்தி பெற்ற கும்பக்கரை அருவி உள்ளது.

விடுமுறை காலங்களில் இங்கு கூட்டம் அதிகமாக இருக்கும். இதன் நீர்ப் பிடிப்பு பகுதிகளான மேற்குத் தொடர்ச்சி மலை, வட்டக்கானல், வெள்ளக்கெவி ஆகிய பகுதிகளில் மழை பெய்தால் அருவிக்கு நீர்வரத்து இருக்கும்.

கடந்த சில நாட்களாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தொடர் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக 11 வது நாளாக கும்பக்கரை அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மைத்துனரும், கழக மூத்த முன்னோடியுமான கோயில் திருமாளம் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களின் 101-வது பிறந்த தினத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. மற்றும் தாட்கோ தலைவர் - முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தொ.மு.ச. மு.சண்முகம் எம்.பி., ஒரத்தநாடு தேர்தல் பார்வையாளர் அக்ரி கே.பி.டி.கணேசன், இல.மேகநாதன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், ஊராட்சி மன்றத் தலைவர் சோனியா பாலமுத்து உள்ளிட்ட நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்று கோ.தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

### நெல்லை மாவட்டம் - திசையன்விளை அருகில் உள்ள அரசூர் -

# இடையன்குடி பகுதிகளில் நதிநீர் இணைப்பு திட்டப் பணிகள்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு நேரில் பார்வையிட்டு ஆய்வு!

*நெல்லை, நவ. 14 -*

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகில் உள்ள அரசூர், இடையன்குடி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் நதிநீர் இணைப்பு திட்டப் பணிகளை சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



பின்னர் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது:-

மறைந்த முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் தாமிரபரணி ஆற்றில் இருந்து தண்ணீர், வீணாக கடலில் கலக்கின்ற தண்ணீரை, வறண்ட நாங்குநேரி, ராதாபுரம், திசையன்விளை, சாத்தான்குளம், உடன்குடி, திருச்செந்தூர் உள்பட தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்திற்கு உட்பட்ட சுமார் 50,000 ஹெக்டேர் நிலப்பரப்பு பயன்பெறும் வகையில் தாமிரபரணி, கருமேணியாறு, நம்பியாறு திட்டம் அறிவிக்கப்பட்டு ரூபாய் 369 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ரூபாய் 205 கோடி செலவில் நடைபெற்ற பணிகள் கடந்த 10 ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டது.

தற்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்திற்காக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதின் அடிப்படையில் 90 சதவீத பணிகள் முடிவடைந்த நிலையில் எம்.எல்.தேரிக்கு செல்கின்ற பாதையில் தனி நபர்கள் 2 பேரும் தலா 2.6 ஹெக்டேர் நிலம் இருந்ததால், அவர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது காரணமாக எம்.எல்.தேரி பகுதியில் தண்ணீர் வருவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

தற்போது வழக்குகள் நிலுவையில் உள்ளதால் சட்டப்படி தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு, அந்த பணிகள் 6 மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு எம்.எல். தேரிக்கு தண்ணீர் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வெள்ள நீர் கால்வாய் மூலம் தண்ணீர் வரும் பட்சத்தில் அனைத்து பணிகளும் முடிவடைந்துள்ளதால், திட்டமிட்டபடி எம்.எல். தேரியை தவிர்த்து அனைத்து குளங்களுக்கும், நம்பியாற்றிக்கும் தண்ணீர் செல்லும் எம்.எல். தேரிக்கு செல்வதற்கான பணியும் 6 மாதத்திற்குள் முடியும்.

மேலும் கல்லிடைக்குறிச்சி பகுதியில் உள்ள திம்மராஜபுரம் எந்த இடத்தில் கண்ணடியான் கால்வாய் குறுக்கே உள்ள பழைய பாலத்திற்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள புதிய பாலம் விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். திம்மராஜபுரம் பாலத்தின் கீழ் கிட்டத்தட்ட 20 இடங்களில் சாக்கடை கால்வாய் செல்கிறது. மேலும் அங்கிருந்து வருகின்ற சாக்கடை நீரினை நல்ல நீராக மாற்றி அதனை ஆற்றில் விடுவதற்கான கிட்டத்தட்ட ரூபாய் 39 கோடி மதிப்பில் துறை சார்ந்த அலுவலர்களால் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அதற்கான பணிகளும் தொடங்கி முடிவடைந்து விடும்.

அதிசய கிணறு, கருமேணி யாறு, நம்பியாறு அணைக்கட்டு உள்பட அனைத்து பகுதிக்கும் தண்ணீர் செல்வதற்கான வாய்ப்பினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்படுத்தி தந்துள்ளார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசூர் பகுதியில் உள்ள குளத்திற்கு தண்ணீர் கொண்டு வந்தால் திசையன்விளை பகுதியில் நிலத்தடி நீர் உயரும் என்ற இப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று ஆய்வு செய்யப்பட்டது.

இந்த குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர குளமும் 10 மீட்டர் ஆழப்படுத்த வேண் டும். மேலும் தண்ணீர் கொண்டு வரும் பகுதி தனியாருக்கு சொந்தமான இடம் அந்த இடத்தை அவர்களிடம் அதற்கான மதிப்பு வழங்கி பெற்று தண்ணீர் கொண்டு வரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொதுமக்கள், விவசாயிகள் பயன்பெறும் வகையில் அணைகளில் இருந்து தண்ணீரை திறந்து விடப்பட்டுள்ளது. பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நதிநீர் இணைப்பு பணிகள் விரைவில் முடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு தெரிவித்தார்.



பட்டாசு புகை எதிரொலி:

# உலகின் மிகவும் மாசுபட்ட 10 நகரங்களில் ஒன்றானது டெல்லி !

## மேலும் 2 இந்திய நகரங்களும் இடம்பிடித்தன!

புதுடெல்லி, நவ.14-

தீபாவளிக்கு பட்டாசு வெடித்ததால் காற்றில் புகை மூட்டம் அதிகமானதால் உலகின் மிகவும் மாசுபட்ட 10 நகரங்களின் பட்டியிலில் டெல்லி இடம் பெற்றுள்ளது. மேலும் இரண்டு இந்திய நகரங்களும் இந்தப் பட்டியலில் இணைந்துள்ளன.

தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தில் பட்டாசுக்கு தனி இடம் உண்டு. பட்டாசு வெடிக்கப்படுவதால் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுவது போல இந்த ஆண்டும் தேசியத் தலைநகர் காற்று மாசு அளவில் முதலிடம் பிடித்தது. ஸ்விஸ் குழுவின் காற்று தரக்குறியீட்டு அளவின் படி, டெல்லியில் காற்றின் தரக் குறியீடு 420 ஆக, ஆபத்தானது என்ற நிலையில் இருந்தது. ஆனால் இந்த முறை டெல்லியுடன், முதல் 10 இடங்களில் கொல்கத்தாவும், மும்பையும் இணைந்துள்ளன. கொல்கத்தா 196 என்ற காற்று தரக்குறியீட்டுடன் 4வது இடத்திலும், இந்தியாவின் வர்த்தக நகரமான மும்பை 163 என்ற காற்று தரக்குறியீட்டுடன் 8வது இடத்திலும் இருக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை இரவு முதலே டெல்லியில் அடர்த்தியான புகை மண்டலம் உண்டாகி காற்றின் தரம் 680 என்ற மிகவும் ஆபத்தான நிலை என்பதைக் கடந்தது. ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி கொண்டாட்டத்தின் போது டெல்லியில் பட்டாசு வெடிக்க தடைவிதித்தாலும் அந்த தடை தீவிரத்துடன் அமல்படுத்தப்படுவதில்லை. இதனால் டெல்லியில் தீபாவளிக்கு மறுநாள் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்து வருகிறது.

இந்தியாவில் ஒவ்வொரு குளிர் காலத்துக்கு முன்பாகவும் காற்றின் தரம் மிகவும் மோசமடைகிறது. குளிர்ந்த காற்று, வாகனங்களின் புகை, தொழிற்சாலைகள், கட்டுமானப் பணி தூசு மற்றும் வேளாண்மை கழிவுகளை எரித்தல் போன்ற காரணிகளால் காற்று மாசு அடைகிறது.

இதனிடையே டெல்லியில் கடந்த வாரத்தில் மிகவும் மோசம் என்ற நிலையில் நீடித்து வந்த காற்றின் தரம் வெள்ளிக்கிழமை பெய்த மழையால் சற்றே மேம்பட்டிருந்தது. இதனால் ஒற்றை இரட்டை இலக்க திட்டத்தை அதிகாரிகள் ஒத்திவைத்தனர். தீபாவளிக்கு பிறகான காற்று மாசு அதிகரிப்பால் மீண்டும் அதனை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் திட்டமிட்டு வருகின்றனர்.

காற்றின் தரக் குறியீடு400 500 ஆக இருந்தால், காற்று மிகவும் மோசமடைந்து இருப்பதாக அர்த்தம். இந்த நிலையில் ஆரோக்கியமானவர்களும் பாதிப்படையும் நிலை ஏற்படும். காற்றின் தரம் 0-50 வரையில் இருந்தால், நன்றாக இருப்பதாக அர்த்தம்.

டெல்லியில் நிலவரம்: டெல்லியில் நேற்று (நவ.13) காலை 7 மணிக்கு காற்றின் தரக்குறீயிடு 275 ஆக மோசம் என்ற நிலையில் இருந்தது. இதனிடையே ஷாதிபூரிலர் 315, அயநகரில் 311, லோதி சாலையில் 308, புசாவில் 355, ஜஹாங்கீர்பூரியில் 333 என மிகவும் மோசம் என்ற நிலையில் காற்றின் தரம் இருந்தது.

முத்தமிழறிஞர் கலைஞரின் மைத்துனர்

# கோ.தட்சிணாமூர்த்தி 101-ஆவது பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் வாழ்த்து!



சென்னை, நவ. 14-

கழகத்தின் மூத்த முன்னோடியும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மைத்துனரும் தனது தாய்மாமாவுமான கோவில் திருமாளம் கோ.தட்சிணா மூர்த்தி அவர்களின் 101-ஆவது பிறந்த நாளையொட்டி, அவரை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்தினார்.

இதுபற்றிய செய்தி வருமாறு:-

**கழகத்தின் மூத்த முன்னோடியும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மைத்துனரும் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தாய்மாமாவுமான தட்சிணாமூர்த்தி அவர்களின் 101ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைபேசி வாயிலாக அவரைத் தொடர்புகொண்டு பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.**

## சிங்கப்பூரிலும் பெரியார்! ஸ்ரீரங்கத்திலும் பெரியார்!

# அரை நூற்றாண்டு கடந்தும் முளைக்கும் விதைகள்!

புரட்சியாளர்கள்புதைக்கப்படுவதில்லை, விதைக்கப்படுகிறார்கள் என்பது சொல் வழக்கு!

பெரியார் மறைந்து ஐம்பதாண்டுகள், அரை நூற்றாண்டுக்காலம் நிறைவடையப் போகிறது! சென்ற வாரம் செய்திகளில் இரண்டு காரணங்களுக்காக இடம் பெற்றார் பெரியார்.

அது இரண்டுமே அவரது சிந்தனைகள் பலவடிவங்களில் தொடர்ந்து இயக்கம் பெறுவதையே சுட்டிக் காட்டுகின்றன. ஒன்று, அறிவியலாளர் மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் சிங்கப்பூரில் **"பெரியாரும் அறிவியலும்"** என்று நிகழ்த்திய உரை. மற்றொன்று பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் ஸ்ரீரங்கத்தில் இருக்கும் பெரியார் சிலையை அகற்றுவோம் என்று கூறியது.

ஒன்று பெரியார் நினைவை போற்றும் அண்ணாதுரை கூற்று. இன்னொன்று பெரியார் நினைவை அகற்றத் துடிக்கும் அண்ணாமலை கூற்று. இரண்டையும் இணைத்துப் பார்க்கும்போது **பெரியாரின்** சிந்தனைகள் இருபத்தோராம் நூற்றாண்டு தமிழ் சமூகத்தில் தொடர்ந்து இயக்கம் பெறப் போவது உறுதியாகின்றது.

அவர் தூவிய விதைகளெல்லாம் தொடர்ந்து முளைக்கப் போகின்றன. தமிழ்நாடு பகுத்தறிவின் நந்தவனமாகும் சாத்தியம் பிரகாசமாக உள்ளது. இந்த இரு நிகழ்வுகளையும் நாம் அலசிப் பார்த்து புரிந்து



கொள்வது அவசியம்.

### சிங்கப்பூரில் பெரியார்

அறிவியலாளர் அண்ணாதுரையின் சிங்கப்பூர் உரை பெரியாரை முற்றிலும் புதிய பரிமாணத்தில் வெளிப்படுத்தியது. அவருடைய குடும்பம் திராவிட இயக்கப் பற்றுள்ளது. அவர் தந்தை மயில்சாமி அவருக்கு பெயர் வைத்ததே அறிஞர் அண்ணாவை மனதில் வைத்துதான். அவர் அதனால் பெரியாரை தன் கல்வித்துறை, அறிவியல் பயணத்திற்கு வழிகாட்டும் கருத்துக்களை வழங்கியவராக தன் உரையில் எடுத்துக் கூறியது சிறப்பாக இருந்தது.

நவீன கால கல்வியின் நோக்கம் என்ன? கீழ்படிதலுக்கு ஏற்ற அறிவுரைகளை மாணவர்களின் மூளையில் ஏற்றுவது அல்ல. தகவல்களை திணித்து, செய்முறைகளை பயிற்றுவித்து அவற்றை பயன்படுத்தி பணி செய்யும் இயந்திரங்களாக உருவாக்குவது அல்ல. மாறாக தனக்கு கிடைக்கும் தரவுகளை வைத்து சிந்திக்கும் ஆற்றல் பெற்றவராக ஒருவரை உருவாக்க வேண்டும் என்பதுதான்.

இந்த நோக்கினைத்தான் ஐரோப்பாவில் ஒளியூட்டுக் காலம் (age of enlightenment) என அழைத்தார்கள். ஜெர்மானிய தத்துவ அறிஞர் இமானுவேல் காண்ட் 1784ஆம் ஆண்டு "What is Enlighternment?" என்ற ஒரு கட்டுரையை எழுதினார். அதில் அவர் மானுடம் தானாக வலிந்து ஏற்படுத்திக் கொண்ட முதிர்ச்சியின்மையிலிருந்து விடுபடுவதே ஒளியூட்டுக் காலம் என்றார்.

பிறர் என்ன கூறுகிறார்கள் என்பதிலிருந்து தன் செயல்பாட்டை வடிவமைத்துக் கொள்ளாமல். தன் சிந்தனையை பயன்படுத்தி சரி, தவறு எது என்பதை பகுத்தாய்வதே முதிர்ச்சி என்றார். அதை அவர் "Aude Sapare!" "அறியத் துணிவாயாக!" என்ற முழக்கமாக முன்வைத்தார்.

**கிட்ட த்தட்ட இந்த கருத்துக்களையே பெரியாரிடமிருந்து அண்ணாதுரை எடுத்துக் கொள்கிறார். "முன்னோர்களின் கூற்றையெல்லாம் விட, உன் அறிவு பெரிது; அதை சிந்தி!" என்கிறார் பெரியார். செக்கு மாடாக இருக்காமல், பந்தயக் குதிரையாக மாறுவதே கல்வி என்று பெரியார் கூறியதை மிக அழகாக பகுத்து, ஆராய்ந்து விளக்கினார் அண்ணாதுரை.**

தனக்குள்ள முக்கிய தகுதி துணிவு என்று பெரியார் கூறியதை ஆராயும் அண்ணாதுரை, ஏற்கனவே பொதுக்கருத்தாக அறிவியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றில் திருப்தியடையாமல், மேலும் அதனை ஆராய்ந்து பார்க்க முற்படுவதற்கு துணிவு வேண்டும் என்பதை விளக்குகிறார். அதனால்தான் நிலவினை பற்றிய கருத்துக்களை முடிந்த முடிவாக கருதாமல் அதில் நீர் இருக்கும் சாத்தியத்தை ஆராயத் துணிந்ததாகக் கூறினார் அண்ணாதுரை.

**இதுபோன்ற சுய அறிதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் கருத்துக்களை எவ்வளவோ தத்துவவாதிகள் சொல்லியிருக்கலாம். சாக்ரடீஸ் சொல்லியிருக்கலாம்; புத்தர் சொல்லியிருக்கலாம்; காண்ட் சொல்லியிருக்கலாம்; நீட்சே சொல்லியிருக்கலாம். ஆனால் தமிழகத்தில் ஒரு கிராமத்தில் பிறந்த பிள்ளைக்கு இந்த கருத்துக்கள் சென்று சேரும் விதத்தில் கூறியவர் பெரியார்.**

பெரியார் உலகில் தோன்றிய எந்த ஒரு தத்துவவாதிக்கும் இணையான சிந்தனை ஆழமும், வாழ்வின், இயற்கையின் நுட்பங்களை மின்னலென வெளிப்படுத்தும் கூர் நோக்கும் கொண்டவர். அண்ணாதுரையின் சிங்கப்பூர் உரையின் சிறப்பு என்னவென்றால் அவர் பெரியாரின் கூற்றுக்களை வெறும் மேற்கோளாகக் கூறாமல், அவற்றின் பொருளை விரிவாக விளக்கி உள்வாங்கும் முறையினை கைக்கொண்டதுதான்.

தமிழ்நாட்டின் எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் பலரும் பெரியாரின் சொற்களை கவனமின்றியே வாசித்து வந்துள்ளார்கள் அல்லது முழுவதும் புறக்கணித்து வந்துள்ளார்கள் என்ற எண்ணம் எனக்கு உண்டு.

ஏனெனில் அவர் சமூகப் போராளியாக எளிய மக்களிடத்தில் பேசியதும், அவர்கள் சுயமரியா தைக்கு அச்சாரமாக பார்ப்பனர்கள் தங்களுக்கு கற்பித்துக்கொண்ட உயர்வுகளை எள்ளி நகையாடி தகர்க்கும் விதத்தில் பேசியதும் காரணமாக இருக்கலாம். அல்லது தேசியம், பார்ப்பனீயம், இறைமுதல்வாதம் ஆகிய புனித மையங்களுக்கு எதி



ராக தீவிரமாகப் பேசியதாலும் இருக்கலாம்.

மயில்சாமி அண்ணாதுரை போல அவர் வார்த்தைகளை அலசி, ஆராய்ந்து விரிவாகப் பொருள்கொள்ளும் போக்கு வளர்ச்சியடையும் போதுதான் பெரியார் சிந்தனையின் ஆகிருதி மேலும், மேலும் வெளிப்படும்.

**பெரியாரின் தத்துவப் பார்வை தனித்துவமிக்கது என்று நான் நம்புகிறேன். அதனை உறுதி செய்து கொள்ளும்பொருட்டு உலகின் பல்வேறு தத்துவ சிந்தனை மரபுகளை பரிசீலித்து வருகிறேன். பெரியாரின் கூற்றுகளும், செயல்முறையும் அபூர்வமானவை. அவருடையது ஒருவிதமான தத்துவார்த்த செயல்முறையாகும் (philosophical praxis). பொதுப்புத்தியினை வடிவமைக்கும் சொல்லாடல்களை கலைத்துப் போட்டு, முரண்வெளிகளை உருவாக்கி, சிந்தனையை விளவிக்கும் செயல்முறை அது.**


**ராஜன் குறை கிருஷ்ணன்**
பேராசிரியர்
அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.




### ஸ்ரீரங்கத்தில் பெரியார்!

திருவரங்கம் என்று தமிழில் அழைக்கப்படும் தலத்திலுள்ள கோயில் மிகவும் தொன்மையானது. நிச்சயம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அதன் மையக் கட்டுமானம் இருந்து வந்துள்ளது.

சோழர் காலத்தில் அது மேலும் சிறப்புப் பெற்றது. கம்பர் அவருடைய ராமாவதாரம் நூலை அங்கேதான் அரங்கேற்றினார் என்று கூறப்படுகிறது. ராமானுஜர் அந்த கோயிலின் நடைமுறைகளை சீர்செய்து வடிவமைத்தார். பின்னர் நாயக்கர் காலத்தில் அந்த கோயில் மேலும் விரி வடைந்துள்ளது. பல்வேறு சுற்று மண்டபங்களும், கோபுரங்களும் கட்டப்பட்டுள்ளன.

தெற்கிலிருந்து அந்த கோயிலில் நுழையும்போது இருக்கும் மையமான நுழைவாயிலில் ஒரு பிரம்மாண்டமான கோபுரம் கட்ட விஜயநகர ஆட்சியில் பதினாறாம் நூற்றாண்டில் துவங்கினார்கள். பல்வேறு காரணங்களால் அடித்தளமிட்டு வாயில் கட்டப்பட்டவுடன் பணி நின்றுபோய்விட்டது. கோபுரம் இல்லாத அந்த பிரம்மாண்ட வாயில் ஒரு அழகான கற்பனையை தூண்டுவதாக விளங்கியது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபதுகளின் இறுதியில் அகோபில மட ஜீயர் தன் கனவில் அந்த கோபுரத்தை கட்டுமாறு அரங்கநாதன் பணித்ததாகக் கூறினார். அதற்கான பரவலான ஆதரவைத் திரட்டினார். இருபதாம் நூற்றாண்டில் பத்து மாடி, இருபது மாடி குடியிருப்புகள் பரவலான பிறகு, விமானப் பயணங்கள் இயல்பான பிறகு, கோபுரங்களுக்கு முன் காலத்தில் இருந்த முக்கியத்துவம் கிடையாது என்றாலும் வலிந்து இந்த பிரம்மாண்ட கோபுரத்தை கட்டவேண்டும் என்று முனைந்தார்.

நானூறு ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட அஸ்திவாரத்தின் மீது கட்டுவது எவ்வளவு பாதுகாப்பானது என்ற கேள்வி எழுந்தது. எல்லா கேள்விகளையும் மத நம்பிக்கை, புனிதவாதம் வென்றது.

அந்த கோபுரம் கட்டும் எண்ணம் உருவாகி, முயற்சியாகி, அது கட்டப்பட்ட காலத்தில் நான் திருவரங்கத்தில்தான் இருந்தேன். எனக்கு அந்த முயற்சியில் சிறிதும் ஒப்புதல் இருக்கவில்லை. இன்றைய காலத்தில் அவ்வளவு பணத்தை கோபுரம் கட்டுவதில் செல்வழிக்க வேண்டுமா என்பது ஒரு கேள்வி.

இரண்டாயிரம் ஆண்டுகளாக இருக்கும் புகழ்மிக்க இந்த கோயிலுக்கு இந்த கோபுரத்தால் என்ன புதிய மகத்துவம் வரப்போகிறது என்ற கேள்வி. மூன்றாவது அழகியல் அடிப்படையில் அந்த கோபுரமற்ற வாயிலின் கம்பீரம் காணாமல் போய்விடுமே என்ற வருத்தம்.

திருவரங்கத்தில் பிறந்தவரான எழுத்தாளர் சுஜாதா மட்டும்தான் இது போன்ற பழமை வாய்ந்த வரலாற்று கட்டுமானங்களை வெளிநாடுகளில் மாற்ற மாட்டார்கள்; அது தேவையற்றது என்று எழுதினார். ஆனால் பெரும்பாலானவர்கள் கோபுரத்திற்கு ஆதரவாகவே இருந்தார்கள்.

தமிழ்நாடு இந்து அறநிலையத் துறை மட்டுமன்றி, கர்நாடக, ஆந்திர அரசுகளும் கோபுரம் கட்ட நிதியுதவி செய்தன. இசையமைப்பாளர் இளையராஜா உதவினார். மேலும் பொதுமக்களிடமிருந்து நன்கொடை கணிசமாகத் திரட்டப்பட்டது. கோபுரம் கட்டி முடிக்கப்பட்டு 1987ஆம் ஆண்டுதிறக்கப்பட்டது. உலகிலேயே உயரமான கோயில் கோபுரம் இதுதான் என்று கூறப்படுகிறது.

எதற்காக இவ்வளவும் கூறுகிறேன் என்றால் கோபுரம் கட்ட எவ்வளவு ஆதரவு திரண்டது, எப்படி மூன்று மாநில அரசுகள் உதவின என்பதையெல்லாம் நினைவு படுத்தத்தான். முக்கியமான சுற்றுலாத்தலம் திருவரங்கம். தினமும் நூற்றுக்கணக்கான இந்திய, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். திருவிழாக்காலங்களில் பல பத்தாயிரம் மக்கள் திரள்வார்கள். வருடம் முழுவதும் பக்தர்களால் நிறைந்திருக்கும் பண்டைய தலம்.

**அங்கே அந்த பிரம்மாண்ட ராஜகோபுரத்திற்கு நூறு மீட்டர் தூரத்தில் ஒரு வெண்கலச் சிலையொன்று வீற்றுள்ளது. அதுதான் பெரியார் சிலை. அதில் கடவுள் கொள்கையை கேள்வி கேட்கும், மறுதலிக்கும் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. அருகில் சென்று படிப்பவர்களுக்குத்தான் அவை தெரியும். அந்த சிலை இருப்பதால் கோயிலில் கூட்டம் குறைந்து விடவில்லை. அது அந்த சிலையின் நோக்கமும் இல்லை.**

மக்களாட்சியில் பொதுவெளி என்பது கருத்துக்கள் களமாட இடமளிக்கவேண்டும். கடவுளை நம்புவது, இறைமுதல்வாதம் ஒரு கருத்து நிலையென்றால், கடவுள் மறுப்பு, பிரகிருதிவாதம் மற்றொரு கருத்து நிலையாகும். கடவுளை நம்புபவர்கள் ஒரு பிரம்மாண்டமான ராஜகோபுரத்தைக் கட்டலாம் என்றால், கடவுள் மறுப்பாளர்கள் அதன் முன் ஒரு சிறிய சிலையைக் கூட வைக்கக் கூடாதா என்ன? அந்த சிலை அங்கேயிருப்பது கடவுள் நம்பிக்கையாளர்களை புண்படுத்தும் என்றால், அந்த கோயிலும், ராஜ கோபுரமும் கடவுள் மறுப்பாளனான என்னை புண்படுத்தாதா?

கடவுள் கோட்பாடும், கடவுள் மறுப்புக் கோட்பாடும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள். ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை. என்றைக்கு கடவுள் என்ற சொல், பிம்பம், கருத்தாக்கம் தோன்றியதோ, அன்றைக்கு அதற்கான மறுப்பும் உடன் தோன்றி விட்டது.



முன்பு கடவுள் பற்றையே ஆதாரமாகக் கொண்டு ஆட்சி நடந்த காலத்தில் மாற்று மத நம்பிக்கையாளர்களைக் கூட அப்புறப்படுத்தும் கொடுங்கோன்மை நிலவியது. தில்லை கோவிந்தரை கடலில் வீசினான் சைவ மத வெறியனான ஒரு சோழ அரசன்.

மக்களாட்சியில் அப்படி ஒரு மதச்சார்பு அரசு சாத்தியமல்ல; பொருத்தமானதும் அல்ல. ஆத்திகர்களுக்கும், நாத்திகர்களுக்கும், நம்பிக்கையாளர்களுக்கும், நம்பிக்கை அற்றவர்களுக்கும் பொதுவான அரசுதான் மக்களாட்சி அரசாக இருக்க முடியும்.

பெரியாரின் கடவுள் மறுப்பு என்பது சுயமரியாதைக்கான கடவுள் மறுப்பு. பூசக வம்சத்தின் வார்த்தைகளுக்கு கீழ்படிந்து அடிமை வாழ்வு வாழ மறுப்பதற்கான கடவுள் மறுப்பு. "கடவுளை மற, மனிதனை நினை" என்ற மானுட முன்னுரிமை சார்ந்த கடவுள் மறுப்பு;

**மயில்சாமி அண்ணாதுரை கூறிய சுயமாக சிந்திக்கும் ஆற்றலை வளர்ப்பதற்கான கடவுள் மறுப்பு. "நட்ட கல்லும் பேசுமோ?" என்று கேட்ட சித்தர் மரபின் ஒருவகையான தொடர்ச்சிதான் அந்த கடவுள் மறுப்பு.**

**அதனால்தான் மக்கள் அந்தச் சிலையையும் மதிப்பார்கள்; கோயிலுக்கும் செல்வார்கள். சுயசிந்தனையின் ஆன்மீகம், பரவசத்தின் ஆன்மீகம் இரண்டையும் ஏற்பவர்களாகவே பண்பட்ட மக்களின் மனோநிலை அமைகிறது.**

**ஆனால் மூட நம்பிக்கையாளர்களும், மத வெறியர்களும், மத அடையாள அரசியல்வாதிகளும்தான் மாற்றுக் கருத்தை அப்புறப்படுத்த நினைப்பார்கள். காலம் அவர்களைத்தான் அப்புறப்படுத்தும். பெரியார் சிலை என்பது மானுட சிந்தனையின் மறு வடிவமே. அதன் ஆன்மீகம் மக்களாட்சியின் ஆன்மீகம்.**

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்

புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் செயலாளர் –

# பெரியண்ணன் 27ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி!

## புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்! அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!





புதுக்கோட்டை. நவ.14 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை முன்னாள் மாவட்டச் செயலாளரும், அரசு தலைமை கொறடாவுமான பெரியண்ணன் அவர்களின் 27ம் ஆண்டு நினைவு நாளை முன் னிட்டு 15.11.2023 புதன்கிழமை காலை 8 மணியளவில் புதுக்கோட்டை நகர தி.மு.க சார்பில் கீழ 2ம் வீதி நெல்லு மண்டி தெருவில் காலை சிற்றுண்டி வழங்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து காலை 9 மணியளவில் மேலக்கோட்டையில் உள்ள பெரியண்ணன் அவர்களின் சமாதிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து காலை 10 மணியளவில் இரத்த தான முகாம் நடைபெறுகிறது.

இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதி நிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கி றோம்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் தமது அறிக்கையில கூறி உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்டவர்கள்

# குங்ஃபூ - கராத்தே தேசிய போட்டிகளில் வெற்றி பெற்று திரும்பிய வீரர்களுக்கு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சால்வை அணிவித்து வாழ்த்தினார்! டி.குமார் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ. 14-

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்டவர்கள் தேசிய அளவில் நடைபெற்ற குங்ஃபூ மற்றும் கராத்தே போட்டியில் வெற்றி பெற்று திரும்பிய வீரர்களை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சாலவாக்கத்தில் வரவேற்று பாராட்டினார்.

பஞ்சாப்பில் நடைபெற்ற தேசிய அளவிலான குங்ஃபூ மற்றும் கராத்தே போட்டியில் தமிழகம் சார்பில் கலந்து கொண்டு இரண்டாம் இடம் பிடித்த வீரர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் தலைமையில் கழகத்தினர் பொது மக்கள் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்ட சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கத்தில் உள்ள மன் சூரியா குங்ஃபூ இன்டர்நேஷனல் பள்ளியைச் சேர்ந்த 23 பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான குங்பூ மற்றும் கராத்தே போட்டியில் கலந்து கொண்டனர்.

எடை அடிப்படையில் நான்கு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்ட நிலையில் இந்தியா முழுவதும் 15க்கும் மேற்பட்ட மாநிலங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் போட்டிகளில் கலந்து கொண்டனர். இதில் தமிழகம் சார்பில் கலந்து கொண்ட 23 வீரர்களும் 9 தங்கம், 9வெள்ளி மற்றும் 5வெண்கலம் ஆகியவற்றை வென்றனர். மேலும், வெற்றி பெற்ற நபர்களின் அடிப்படையில் தமிழகம் சார்பில் கலந்து கொண்ட அணியினர் இரண்டாவது இடத்தை பிடித்தனர்.

இந்நிலையில் இன்று வெற்றி கோப்பையுடன் தாயகம் திரும்பிய வீரர் வீராங்கனைகளுக்கு உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் சுந்தர் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது பட்டாசுகள் வெடித்து பேண்டு வாத்தியங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு மவாட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து சால்வை போர்த்தி பாராட்டுத் தெரிவித்து வாழ்த்தினார்.

மேலும் அடுத்த வருடம் மலேசியாவில் நடக்க உள்ள போட்டியில் இந்த அணியினர் கலந்து கொள்ள உள்ளது குறிப்பிடத்தக்கது.

---

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. அறிவிப்பு!

வருகின்ற 15.11.2023 புதன்கிழமை, காலை 11.00 மணி அளவில் சென்னை, பட்டாபிராம் - 72, மகாத்மா காந்தி சாலை, எண்:5-ல் உள்ள எனது (ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ.) கலைஞர் இல்ல சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் மற்றும் இணை செயலாளர்கள் மருதூர் ஏ.ராமலிங்கம், வி.பி.ராஜன், திப்பம்பட்டி ஆறுசாமி, செ.புஷ்பராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் துணைச் செயலாளர்கள் பி.துரைசாமி, சா.இராசேந்திரன், மு.பொன்தோஸ், சி.தசரதன், மு.பரமானந்தம், மாரியப்பன் கென்னடி ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** நீட் தேர்வினை ரத்து செய்யக்கோரி கையெழுத்து இயக்கம் நடத்துவது மற்றும் ஆதிதிராவிடர் நலக்குழு மாநில கூட்டம் நடத்துவது குறித்து.


**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.11.2023

**ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.வி.என். சோமு
**நவம்பர் 14 (1997)**



திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களில் ஒருவராகவும், கழக அமைப்புச் செயலாளராகவும், சட்டத்துறைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சராக பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சியில் துணை மேயராகப் பணியாற்றியவர்.

குழந்தைப் பருவத்திலேயே தன்னுடைய தாயாரோடு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் 1938ஆம் ஆண்டு சிறைச் சாலையிலே இருந்தவர். அதுமுதல் கழகத்திற்காக பல தியாகங்கள் செய்து, சிறைக் கோட்டங்களுக்கு சென்று களம் பல கண்டு கழகத் தலைமை இடுகின்ற கட்டளைகளை யெல்லாம் சிரமேல் தாங்கி அரும் தொண்டாற்றியவர்" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றியம் பெருமாள் பேட்டை மீனவர் கிராமத்தைச் சேர்ந்த அருண் என்பவர் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று திரும்பிய போது இடி - மின்னல் தாக்கி உயிரிழந்தார். இதையடுத்து அருண் குடும்பத்திற்கு தமிழக அரசின் பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூபாய் 4 லட்சம் நிதியை சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் வழங்கினார். உடன் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல் மாலிக், அமிர்த விஜயகுமார் மற்றும் பலர் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் புகழ் பரப்பும் முத்தமிழ்த் தேர்!

# சிவகங்கை மாவட்டத்திற்கு இன்று வருகை!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, நவ. 14-

தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சரும், சிவகங்கை மாவட்டச் செயலாளருமான கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

தமிழகத்தில் 94 வயதில் தனது இறுதிநாள் வரை தமிழர்களுக்காக வாழ்ந்து மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் இன்றும் தமிழர்களின் இதயத்தில் இடம் பெற்றுள்ளார். இத்தகைய உலகம் போற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. கழகத்தின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள், பல்வேறு நலத்திட்ட உதவிகள் மாநிலம் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக தமிழக முதல்வர் தளபதி அவர்கள் தலைவர் கலைஞர் ஐந்து முறை முதல்வராக இருந்து மக்களுக்கு செய்த சாதனைகளை விளக்கும் வகையில் அரசின் சார்பிலும் விழா நடத்தப்படும் என்று அறிவித்தார். அதன்படி அரசு சார்பில் பல்வேறு விழாக்கள் நடைபெற்று வருகிறது. இந்த விழா சிறப்பாக நடைபெற 12 குழுக்களையும் முதல்வர் அறிவித்தார்.

அந்த குழுவில் எழுத்தாளர் கலைஞர் குழுவில் சார்பில் எனது தலைமையில் குழு அமைக்கப்பட்டது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு செய்த அரும் பணிகள் அவரது பன்முகத்தன்மையை மக்களும் இன்றைய குறிப்பாக இளைஞர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அதில் தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழுக்கு புகழ்சேர்த்திடும் வகையில் முத்தமிழ் தேர் அலங்கார ஊர்தி தயாரிக்கப்பட்டது. அந்த அலங்கார ஊர்தி இம்மாதம் நான்காம் தேதி ஐயன் திருவள்ளுவருக்கு 133அடி உயரத்தில் சிலை அமைத்து பெருமை சேர்த்த தலைவரின் முத்தமிழ் தேர் கன்னியாகுமரியில் துவக்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நான், அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திருமதிகயல் விழி செல்வராஜ் மற்றும் உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தார் கள் அந்த முத்தமிழ் தேர் பல்வேறு மாவட்டங்களில் சென்று மக்களின் வரவேற்பினைப் பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக வருகிற 14ஆம் தேதி முத்தமிழ் தேர் செவ்வாய்க்கிழமை சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளது.

சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும் தேரினை மாவட்ட எல்கையில் மாவட்டக் கழகத்தின் சார்பிலும் அரசின் சார்பிலும் அனைத்து தமிழ் அமைப்புகளை சார்பிலும் பிரமாண்டமான வரவேற்பு தரப்பட உள்ளது. அதை தொடர்ந்து மானாமதுரை வட்டாரம், சிவகங்கை, திருப்பத்தூர், காரைக்குடி, ஆகிய பகுதிகளில் இந்த முத்தமிழ் தேர் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளது.

இந்த தேரினைஅனைத்து தரப்பு அரசியல் கட்சி பிரமுகர்களும் தமிழ் ஆர்வலர்களும், கலந்து கொண்டு இந்த தேரினை பார்த்து தலைவர் கலைஞர் அவர்களின் பன்முகத் தன்மையை தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்து உள்ளார்.

---

தலைமைக் கழகப் பேச்சாளர்- திருச்செங்கோடு

# முரசொலி முத்து மறைவு!

## முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 14 -

திருச்செங்கோடு நகரக் கழக முன்னாள் செயலாளரும் தலைமைக் கழகப் பேச்சாளருமான முரசொலி முத்து மறைவுச் செய்தி அறிந்து முதல்வரும் - கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

திருச்செங்கோடு நகர கழக முன்னாள் செயலாளரும், தலைமைக் கழகப் பேச்சாளருமான கழகத்தின் மூத்த முன்னோடி முரசொலி முத்து அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறேன். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

ஐதராபாத்தில்

# அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கர தீ விபத்து!

## 9 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

ஐதராபாத், நவ.14-

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் உள்ள நம் பள்ளி பஜார்கட் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்று அமைந்துள்ளது. இந்நிலையில், இங்குள்ள கிடங்கில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீ மளமளவென அடுத்தடுத்த வீடுகளுக்கும் பரவியது.

தகவலறிந்து 6 தீயணைப்பு வாகனங்களில் அங்கு வந்த 30க்கும் மேற்பட்ட தீயணைப்புத்துறை வீரர்கள், தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். இருப்பினும் தீ விபத்தில் சிக்கி 9 பேர் வரை உயிரிந்து விட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். சிலர் காயமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தீ விபத்தால் குடியிருப்பு பகுதி முழுவதும் பரபரப்பு நிலவியது.

தீ விபத்தில் சிக்கிக் கொண்ட பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டோரை தீயணைப்புத்துறை வீரர்கள் உயிரை பணையம் வைத்து பத்திரமாக மீட்டனர்.

---

கழக துணைப்பொதுச்செயலாளர்

# கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் பி.கீதாஜீவன் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான திருமிகு. கனிமொழி கருணாநிதி, சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளருமான பி.கீதா ஜீவன் ஆகியோர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சி நிரல் விபரம்:-

**நாள் : 17.11.2023 வெள்ளிக்கிழமை**

**நேரம் - நிகழ்ச்சி நடைபெறும் இடம் - ஒன்றியத்தின் பெயர் - நிகழ்ச்சி விபரம்:-**

மாலை 4.00 மணி - காடல்குடி - புதூர் கிழக்கு - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை 5.00 மணி - மாவிலோடை - புதூர் கிழக்கு - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

மாலை 6.00 மணி - என்.ஜெகவீரபுரம் - புதூர் கிழக்கு - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

இரவு 7.00 மணி - கந்தசாமிபுரம் - புதூர் கிழக்கு - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

இரவு 8.00 மணி - மாதலப்புரம் - புதூர் கிழக்கு - மக்கள் களம் - நிகழ்ச்சி மூலம் பொது மக்களின் குறை கேட்டல்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.அ. ஜின்னா
**நவம்பர் 14 (2022)**



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் உற்ற நண்பராக, சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர்.

சென்னை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத் துணைத் தலைவராக இருந்தபோது, எதிரெதிர் துருவங்களான பேரறிஞர் அண்ணாவையும், மூதறிஞர் இராஜாஜியையும் ஒரே மேடையில் அமர வைத்து இந்தி திணிப்பிற்கு எதிராக பேச வைத்தவர்.

கழகத் தலைவர் அவர்கள் , மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்ட போது, அவருடன் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

கழக மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றி, கழகத்தின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலித்தவர்.

தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலை வடித்து அதனை சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நிறுவியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் அருகே உள்ள மருச்சுகட்டியில் 11.11.2023 அன்று முத்தமிழ் அறிஞர் அலங்கார ஊர்தி வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, தலைமையேற்று முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை மலர்தூவி வரவேற்றார்.

### ஆன்லைன் தடைச் சட்டம்;

# உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் மேல்முறையீடு வரவேற்கத்தக்கது!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ. 14 -

தமிழ்நாடு அரசின் ஆன்லைன் தடைச்சட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்து ரம்மி போன்ற ஆட்டங்களுக்கு விதிவிலக்கா? உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் மேல்முறையீடு வரவேற்கத்தக்கது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி குறிப்பி ட்டுள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆன்லைன் சூதாட்டத்தில் தங்களது பணத்தை அளவற்ற முறையில் இழந்து தற்கொலை செய்துகொண்டு தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டோர் அநேகர்.

அதன் காரணமாக, அதைத் தடை செய்ய பல முற்போக்குச் சமூக நல சிந்தனையாளர்களும், கட்சிகளும், இயக்கங்களும் வற்புறுத்தியதால், முந்தைய அ.தி.மு.க. ஆட்சி கொண்டு வந்த சட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தும், ஜஸ்டிஸ் சந்துரு தலைமையில் ஒரு குழு அமைத்து அறிக்கை பெற்றும் தடைச் சட்டமியற்றியது தி.மு.க. அரசு.

அதனை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டம் செல்லுபடியாகும் என்று தீர்ப்பளி த்திருந்தும் 'ரம்மி' போன்ற சில விளை யாட்டுகள் தடை செல்லாது என்பதாக அளித்த தீர்ப்புப் பகுதி ஏற்புடையதல்ல.

சமூகத்தின் பல பகுதி மக்கள் பெரும் இழப்புக்கு ஆளாகி, தற்கொலைகள் நடைபெறாமல் தடுக்கும் வாய்ப்புக்கு இது உதவாது என்பதால், அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளதாக சட்ட அமைச்சர் ரகுபதி அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டி வரவேற்கவேண்டிய ஒன்றாகும். உச்சநீதிமன்றத்தில் நல்ல தீர்ப்பு கிடைக்குமென்று நம்புகிறோம்!

சூதாட்டத்தை "அறிவை விருத்தி செய்யும் ஆட்டம்" என்று வர்ணிப்பது மிகவும் கோணலான சிந்தனையாகும்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### நீலகிரி மாவட்டத்தில் – கூடுதலாக

# 5,731 பேருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட உதவித் தொகை!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

நீலகிரி, நவ. 14 -

முதலமைச்சர் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளுக்கு ரூ.1,000/- வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாத்து றை அமைச்சர் கா.ராமச்சந்திரன் கூடுதலாக 5731 பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் பணம் எடுக்கும் பற்றட்டை மற்றும் தகவல் கையேடுகளை வழங்கினார்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில் சுற்று லாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:

"மகளிர்களின் உழைப்பை கௌரவப்படுத்தும் நோக்கிலும், பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000/- உரிமைத்தொகை "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ்" வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்து, அதனை மிகவெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் முதல் கட்டமாக 1,05,984 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இரண்டாம் கட்டமாக நமது மாவட்டத்தில் 5,731 பயனாளிகளை புதியதாக தேர்வு செய்து அவரவர் வங்கி கணக்கில் வைப்புத் தொகை ரூ.1,000/- வரவு வைக்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் மிகச் சிறப்பாக செயல்பட்டு வரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் 1,11,715 பயனாளிகள் மாதந்தோறும் ரூ.1,000/- பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

அதேபோல், தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி வேலைநாடுபவர்களை வேலையில் அமர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் 2021 முதல் 2023 வரை பல்வேறு முகாம்களின் மூலம் 2,838 வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப் பட்டுள்ளது.

மேலும், மகளிர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம், புதுமைப் பெண், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ஓய்வூதியம், 50 வயது முடிந்த திருமணமாகாத ஏழை பெண்களுக்கு ஓய்வூதியம், ஆதரவற்ற விதவை ஓய்வூதியம், 2 பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், ரூ.50 ஆயிரம் வழங்கும் திட்டம், பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், திருமண நிதியுதவி திட்டங்கள் உட்பட பல்வேறு திட்டங்களை மகளிர்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் பாது காக்கும் அரசாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது.

மேலும், மகளிர் நலனை கருத்தில்கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் வரலாற்றுச்சிறப்பு மிக்க கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை பெண்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. கீர்த்தி பிரியதர்சினி, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது குதரதுல்லா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மு.திராவிடமணி (கூடலூர்), நகராட்சி தலைவர்கள் திருமதி.பரிமளா (கூடலூர்), திருமதி.சிவகாமி (நெல்லியாளம்), கூடலூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் திருமதி.கீர்த்தனா, வட்டாட்சியர்கள் திருமதி.ராஜேஸ்வரி (கூடலூர்), கிருஷ்ண மூர்த்தி (பந்தலூர்), திட்டக் குழு உறுப்பினர் ராஜேந்திரன், பேரூராட்சி தலைவர்கள் சித்ரா தேவி (ஓவேலி), செல்வி வள்ளி (தேவர் சோலை), ஊராட்சி மன்றத் தலைவர்கள் சுனில் (ஸ்ரீமதுரை), திருமதி.டெர்மிளா (நெலாக்கோட்டை), திருமதி.லில்லி எலியாஸ் (சேரங்கோடு) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கே. கோட்டையப்பன்

**நவம்பர் 13 (1996)**



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சிவந்திப்பட்டி பஞ்சாயத்து தலைவராகவும் – மாவட்ட நிலவள வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "இளைஞர் அணியின் செயல்திறன் மிக்க சிங்கக் குட்டியாகவும், அனைவரையும் அரவணைத்து கழகத்தின் ஆக்கப்பணிகளை அயர்வின்றி நிறைவேற்றுகிற அமைதியின் உறைவிடமாகவும் திகழ்ந்தவர்" என தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நான் அவன் இல்லை...

பிரதமர் நரேந்திர மோடி OBC எனும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் இல்லை. இவர், பிறப்பால், 'மோத் கஞ்சி' (Moth Ghanchi) என்ற உயர்சாதியைச் சார்ந்தவர் என்றும், பெரும்பான்மையாக வாழும்

இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் வாக்குகளைக் கவர்வதற்காகவே 2001-ல், மோடி குஜராத்தின் முதல்வரான பிறகு, தான் பிறந்த உயர் ஜாதியை, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பில் (OBC) இணைத்துவிட்டார் என்றும், காங்கிரசு கட்சியைச் சார்ந்த, முன்னாள் குஜராத் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சக்திசின் கோஹில் (SakthiSinh Gohil) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம், தான் பெற்ற தகவலைப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இது குறித்து, குஜராத் அரசின் செய்தித் தொடர்பு அதிகாரி நிதின் பட்டேல் அரசு சார்பாக கருத்து தெரிவிக்கும்போது, 'மோத் கஞ்சி' என்ற உயர்ஜாதியை 25 ஜூலை 1999 அரசு ஆணை எண்: 25(b)-ல், இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தோடு இணைக்கப்பட்ட தகவலைத் தெரிவித்தார். இதன்படி, 17 செப்டம்பர் 1950 முதல் 24 ஜூலை 1999 வரை ஏறத்தாழ 50 ஆண்டு காலம் உயர் ஜாதியாக இருந்த நரேந்திர மோடி கடந்த 23 ஆண்டுகளாக, இதர பிற்படு த்தப்பட்ட வகுப்பினராக வலம் வருகிறார் என்பதை குஜராத் அரசு ஆவணம் தெளிவுபடக் கூறுகிறது. உயர் ஜாதியாகப் பிறந்த மோடி இன்று இல்லை. இன்று இருக்கிற 'OBC மோடி' 1999-க்கு முன்னர் இல்லை. ஏனெனில்,.....



**பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்,**
கழக செய்தித் தொடர்பு செயலாளர்,
ஆசிரியர் - THE RISING SUN.

இந்த சூழ்நிலையில்தான், விரைவில் சட்டமன்ற தேர்தல் நடைபெறவிருக்கும் சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள பிலாஸ்பூர் மாநகரில் தேர்தல் பிரச்சாரத்தின்போது, தான் (மோடி) ஒரு OBC என்றும், தன்னை அவமானப்படுத்துவது ஒட்டு மொத்த OBC சமூகத்தையே அவமானப்படுத்துவதைப் போன்றது என்றும் பரிவர்த்தன் மஹா சங்கல்ப் என்ற மக்கள் சந்திப்பில் தன்னை ஒரு OBC ரட்சகரைப் போல் அங்கலாய்த்துக் கொண்டார்.

பிறப்பால் அப்படி, பிறகு இப்படி என்றாலும், இன்றைக்கு மோடி தன்னைக் காட்டிக் கொள்ளக் கூடிய OBC-ன் ரட்சகராக உண்மையிலே இருக்கிறாரா? என்றால், புள்ளி விவரங்கள் நேர்மாறாக சொல்லுகிறது....எப்படி எனில், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, இந்தியாவில் OBC 52.1%, SC 18.6%, ST 8.6% மற்றும் OC 20.7% ஆகும். மோடி தலைமையிலான இந்த அரசில் 303 பா.ஜ.க. எம்.பிக்கள் உள்ளனர். இதில், OBC 85 (28.5%) பேர், SC/ST 77 (25.4%) பேர், OC 141 (46.1%) பேர் உள்ளனர். அதாவது, ஏறத்தாழ 80% உள்ள OBC, SC/ST மக்களுக்கு 54%-மும், 20% மட்டுமே உள்ள உயர்ஜாதி மக்களுக்கு 46%-மும் கொடுக்கப்பட்டுள்ளது. மோடியின் அமைச்சரவையில் உள்ள 79 அமைச்சர்களில், OBC 27 (34.2%) பேர், SC/ST 20 (25%) பேர் மற்றும் OC 33 (41%) பேர் அமைச்சர்களாக உள்ளனர். இதிலிருந்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும், அமைச்சர்கள் எண்ணிக்கையிலும் ஏறத்தாழ 80% உள்ள இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை விட, 20% உள்ள உயர்ஜாதி மக்களின் பிரதிநிதிகளே கோலோச்சுவது தெள்ளத்தெளிவாக புலப்படுகிறது.

ஜனநாயகத்தில், சட்ட, திட்டங்கள் இயற்றும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்திலே சமூகநீதி இவ்வளவு மோசம் என்றால், அதை நடைமுறைப் படுத்துகின்ற நிர்வாகத் துறையில் இன்னும் சீர் குலைக்கப் பட்டிருப்பதாகவே அறிய முடிகிறது. 28 மார்ச் 2023-ல், கேரள நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ் அவர்களின் IAS, IPS மற்றும் IOFS பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரங்கள் குறித்த கேள்விக்கு, ஒன்றிய அமைச்சர் ஜிதேந்திரா எழுத்து மூலமாக பதிலளிக்கையில், 2018-லிருந்து, 2022 வரைக்குமான ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 4365 அதிகாரிகள் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும், அதில், OBC 695 (15.9%) பேர், sc 334 ( 7.65%) பேர், ST 166 (3.8%) பேர் மற்றும் Oc 3170 (72.6%) தெரிவித்துள்ளார். அதோடு, பாராளுமன்றத்தில் உள்ள அரசுத்துறை முதன்மைச் செயலாளர்கள் 90 பேரில், 3 பேர்தான் OBC வகுப்பை சார்ந்தவர் என்ற அதிர்ச்சித் தகவலினை 20 செப்டம்பர் 2023ல், காங்கிரசு இளம் தலைவர் ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் தெரிவித்தபோது, ஒட்டுமொத்த இந்தியாவே அதிர்ந்து நின்றது.

நீங்கள் உண்மையிலேயே OBC தலைவர் எனில், இந்த எண்ணிக்கை இப்படி இருக்காதே என்று மோடியைக் கேட்டால், அது அப்படித்தான் இருக்கும். ஏனெனில்,.....

இந்திய அரசியலமைப்பின்படி, நமது ஜனநாயக அரசின், அதிகாரப் பகிர்வு என்பது, சட்டம் இயற்றுதல், நடைமுறைப்படுத்துதல், நீதி பரிபாலனம் என்ற மூன்று அமைப்புகளுக்கு தனித் தனி அதிகாரங்களுடன் பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கிறது. இதில், சட்டமியற்றுதலிலும், அதை நிர்வகிக்கும் அதிகார அமைப்பிலும் உயர்ஜாதி ஆதிக்கம் இருப்பதை ஐயமற உணர முடிகிறது. ஒரு வேளை, நீதி பரிபாலனத்திலாவது இதர பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட 80% மக்களுக்கான பிரதிநிதித்துவம் இருக்குமோ!? என்று பார்த்தால், ஒன்றிய சட்டத்துறை இது குறித்து, பாராளுமன்ற நிலைக்குழுவிற்கு, 9 ஜனவரி 2023-ல் அளித்த அறிக்கையில், 2018 முதல் 2022 வரையிலான ஐந்தாண்டு காலத்தில், உயர்நீதி மன்றங்களில் நியமிக்கப்பட்ட 537 நீதிபதிகளில், OBC 57 (11%) பேர், SC/ST 22 (4.1%) பேர், சிறுபான்மை 14 (2.6%) பேர், மற்றவர்கள் 20 (4%) பேர் மற்றும் OC 424 (79%) பேர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து, பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான ஆட்சியில், உயர்ஜாதியினரே எங்கும் வியாபித்திருப்பதை, 'உள்ளங்கை நெல்லிக்கனி' போல் உணரமுடிகிறது.

**இது எப்படி என்று? பிரதமர் மோடியிடம் கேட்டால்,**

**அது**
**அப்படித்தான் இருக்கும்.**
**ஏனெனில்...**
**ஏனெனில்...**
**ஏனெனில்...**
**நான் அவன் இல்லை....**

### கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி – முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி

# பார்த்திபனூர் அருகே மருச்சுக்கட்டியில் மலர்தூவி வரவேற்பு!

### மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல். ஏ. மரியாதை!

இராமநாதபுரம், நவ. 14 -

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் அருகே உள்ள மருச்சுகட்டியில் 11.11.2023 அன்று முத்தமிழ் அறிஞர் அலங்கார ஊர்தி வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பா. விஷ்ணு சந்திரன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் , ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, தலைமையேற்று முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை மலர்தூவி வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி மதுரையிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்ததையொட்டி இராமநாதபுரம் மாவட்டம் நுழைவு பகுதியான மருச்சுகட்டியில் முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி வரவேற்கப்பட்டதுடன் முத்தமிழ்த் தேர் அலங்கார ஊர்தியில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், மற்றும்.பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர்செ.முருகேசன், மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் உ.திசைவீரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கே.கருப்பையா, பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணா நிதி, இராமநாதபுரம் நகர் மன்ற துணைத் தலைவர் பிரவீன் தங்கம், கமுதி ஒன்றிய செயலாளர்கள் வி. வாசுதேவன், சண்முகநாதன், பரமக்குடி ஒன்றிய செயலாளர்கள் டி. ஜெயக்குமார், அண்ணாமலை, முன்னாள் ஒன்றிய செயலாளர் சந்திரசேகர், ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர் வனத்துறையின் மூலம் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி 100 மரக்கன்றுகள் நடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் மரக்கன்றுகள் நடவு செய்து துவக்கி வைத்தனர்.

தொடர்ந்து கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பேனா வழங்கி சிறப்பித்தார்கள்.

இவ்விழாவையொட்டி நாதஸ்வர நிகழ்ச்சி, சிலம்பாட்டம் மற்றும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சி நடைபெற்றன.

பின்னர் முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி இராமநாதபுரத்திற்கு வருகை தந்து ஏராளமான பொதுமக்கள் அலங்கார ஊர்தியினையும் அதன் உள்ளே உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலையினை பார்வையிட்டு சென்றனர் .

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன உயிரின காப்பாளர் பார் ஜெகதீஷ் சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. கோவிந்தராஜலு , பரமக்குடி சார் ஆட்சியர் அப்தாப் ரசூல், மாவட்ட வன அலுவலர் எஸ்.ஹேமலதா, இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் கே.டி.பிரபாகரன்ம மாவட்ட சமூக நல அலுவலர் தேன்மொழி , குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் விசுவபதி , பரமக்குடி வட்டாட்சியர் ரவி, அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

# 2000 கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சிவகங்கை, நவ. 14 - சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திருமதி தமிழரசிரவிக்குமார் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு திருப்புவனம், மானாமதுரை, இளையான்குடி, ஆகிய மூன்று ஒன்றியங்கள் திருப்புவனம் இளையான்குடி பேரூராட்சிகள் மானாமதுரை நகராட்சிக்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் 2000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் 2024 காலண்டர் போன்ற பரிசுப்பொருட்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் வே.தமிழ்மாறன், கா.வெங்கட் ராமன், ஆறு.செல்வராசன் துரை.ராஜாமணி, எம்.அண்ணா துரை, எம்.ஏ. கடம்பசாமி, திருமதி வசந்தி சேங்கைமாறன் பேரூர் கழக செயலாளர்கள் நாகூர்கனி, பி.ஏ. நஜ்முதீன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இப்ராகிம் கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன், மானாமதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, மானாமதுரை ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணா துரை, துணைத் தலைவர் முத்துச் சாமி விவசாய அணி பா.காளிமுத்து, தகவல் தொழில்நுட்ப அணி அமைப் பாளர் சுப.அன்பரசன், நகர்மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர் மற்றும் ஊராட்சிக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



சென்னை பெரியார் திடலில் அன்னை மணியம்மையார் அரங்கில் 11.11.2023 – சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் பெருங்கவிக்கோ துணைவியார் அன்னை சேதுமதியின் 18 வது ஆண்டு நினைவேந்தலும் தமிழக சிறப்புக்குரியவர்களுக்கு பாராட்டுதலும் பொற்கிழியும், வாழ்த்து விருதும் சென்னை வேல்ஸ் பல்கலைக் கழக மொழிகள் புல முதல்வர் பேராசிரியர் ப.மகாலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் இ.ஜே.சுந்தர் தொடக்கவுரையாற்றிட, திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அனைத்து தமிழ்ச் செம்மல்களுக்கு விருதும் பொற்கிழியும் வழங்கி சிறப்புரை ஆற்றினார். பன்மொழிக் கவிஞர் முனைவர் எழில் வேந்தன், முதுபெரும் புலவர் வே.பதுமனார் உள்ளிட்ட பதினெட்டு தமிழறிஞர்களுக்கும் பாராட்டுதலும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பெருங்கவிக்கோவின் புதல்வர்கள் வா.மு.சே.திருவள்ளுவர், வா.மு.சே.ஆண்டவர் வாசிக்க சிறப்பாக நடைபெற்றது. பெருந்திரளாக தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பாபு ஜனார்த்தனன்

நவம்பர் 14 (1989)



பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றினார். பின்னர் தி.மு.க. ஆரம்பித்தவுடன் கழகத்தில் இணைந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பினை பெற்றவர்.

1978ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை ஒன்றுபட்ட வடஆற்காடு மாவட்ட தி.மு.க. செயலாளராக பணியாற்றியவர்.

1980ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் செய்யாறு தொகுதியில் போட்டியிட்டு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தலைமைக் கழகப் பேச்சாளர் - திருச்செங்கோடு

# முரசொலி முத்து மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, நவ. 14 - நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு நகரக் கழக முன்னாள் செயலாளரும் தலைமைக் கழகப் பேச்சாளருமான முரசொலி முத்து நேற்று (13.11.2023) காலை 11 மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள், தோழர்கள் ஏராளமானோர் மறைந்த முரசொலி முத்து உடலுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

# சென்னை உள்பட 15 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு!

சென்னை, நவ. 14 - சென்னை உள்பட 15 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக் குறிச்சி, திருப்பத்தூர், வேலூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக் கூடும் என தகவல் தெரிவித்துள்ளனர்.

## தி.மு.க. வர்த்தகர் அணி

# திருச்சி மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு !

திருச்சி மண்டலத்திற்குட்பட்ட திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம், எதிர்வரும் 16-11-2023 வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அரங்கில்" கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில், திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி, திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தியாகராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, நாகை, மயிலாடுதுறை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. வர்த்தகர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி நவம்பர்26 அன்று திருச்சியில் நடைபெற உள்ள "கலை இரவு" விழாவினை சிறப்பாக நடத்துவது குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18 -
நாள்: 11 -11- 2023.

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

# 26 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பேரறிஞர் அண்ணாவின்
பெருமைமிகு மாணவன்...
முத்தமிழறிஞர் கலைஞரின்
விசுவாசமிகு தம்பி...
கழகத்தலைவர் தளபதியின்
பாசமிகு தமையன்...
நீங்கள் திராவிடம் செதுக்கிய கல்வெட்டு;
பாச நினைவோடு வாழ்கிறோம் - உமை விட்டு!



தோற்றம்: 11–05–1937 மறைவு: 14–11–1997

**திரு. என். வி. என். சோமு**
முன்னாள் அமைப்புச் செயலாளர், தி.மு.க.,
முன்னாள் மத்திய பாதுகாப்புத்துறை
இணை அமைச்சர்

நீங்கா நினைவுகளுடன் அன்பு மகள்
**டாக்டர். கனிமொழி என்.வி.என். சோமு**
M.B.B.S. M.S. (OBST. & GYNAC.)
மாநிலங்களவை உறுப்பினர்,
மாநில மருத்துவ அணித் தலைவர்,
செய்தி தொடர்பாளர், தி.மு.க.

# முதலமைச்சரும் தீபாவளி வாழ்த்தும்!

## கவிப்பேரரசு வைரமுத்து பதில்!





**ஊடகத்தார் கேள்வி:**

*தீபாவளிக்கு முதலமைச்சர் வாழ்த்துச் சொல்லவில்லை என்று சொல்கிறார்களே?*

**கவிப்பேரரசு வைரமுத்து பதில்:**

**மகளிர்க்கு உரிமைத்தொகை வழங்கியதன்மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதலமைச்சர் வாழ்த்துச் சொல்லிவிட்டாரே! ஒரு பழமொழி உண்டு: "சொல் என்பது பித்தளை; செயல் என்பது தங்கம்." பித்தளையால் வாழ்த்துவதைவிட தங்கத்தால் வாழ்த்தியிருக்கிறார் தங்கத் தளபதி. சொல்லால் வாழ்த்துவதைவிட செயலால் வாழ்த்துவது சிறப்பல்லவா?**

## புவியின் துருவங்களில்

# பனிப்பாறைகள் வேகமாக உருகுகின்றன!

## ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை!

பெர்லின், நவ. 14 -

புவியின் துருவ பகுதிகளில் பனிப்பாறைகள் உருகிவரும் நிகழ்வு மிகவும் ஆபத்தான கட்டத்தை தொட்டுவிட்டதாக ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஒரு பூமி துருவம் என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் துருவ பகுதியில் அமைந்துள்ள நாடுகள் மற்றும் பனிப்பாறைகள் உள்ள 40 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

பின்னர் பேட்டியளித்த ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் ஜோசப் ஆஸ்ட்டா பாஸ்டர் பூமியின் வட மற்றும் தென்துருவங்களில் பனிக்கட்டி உருகுவது மிகவும் மோசமான நிலையை எட்டிவிட்டதாக எச்சரித்துள்ளார். குறிப்பாக ஆர்டிக் மண்டலத்தில் பனிக்கட்டிகள் மிகவும் வேகமாக உருகி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பனி உருகுதல் தொடர்பாக தங்கள் மையத்தின் செயற்கை கோள்கள் எடுத்த புதியபடங்களையும் அவர் வெளியிட்டுள்ளார். உலக நாடுகளுக்கு கால நிலை மாற்றம் தற்போது பெரிய சவாலாக மாறியுள்ளதாக ஐரோப்பிய விண்வெளி மையத்தின் தலைவர் ஜோசப் தெரிவித்துள்ளார்.

இந்த நூற்றாண்டின் மத்தியிலாவது கார்பன் உமிழ்வை குறைத்தாக வேண்டும் என்பது இவரது கருத்தாகும்.

பனிப்பாறைகள் உருகுவது வேகம் பிடித்திருப்பதால் கடல் நீர்மட்டம் இன்னும் வேகமாக உயர்வதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார். காலநிலை மற்றம் என்ற சவாலை எதிர்கொள்ள தனிப்பட்ட ஒவ்வொருவரின் பங்களிப்பும் தேவை என்று அவர் கூறியுள்ளார். அத்துடன் அரசியல் தலைவர்கள் உடனடியாக முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## முத்தமிழறிஞர் கலைஞரின் மைத்துனரும் கழக மூத்த முன்னோடியுமான

# கோயில் திருமாளம் தட்சிணாமூர்த்தி 101-ஆவது பிறந்த நாள்!

## 'முரசொலி' வாழ்த்தி மகிழ்கிறது!

**சென்னை, நவ. 14-**

**திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஒன்றியம் - கோயில் திருமாளத்தைச் சேர்ந்த கழகத்தின் மூத்த உறுப்பினர் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு 101-வது பிறந்த நாள்.**

**இதனையொட்டி அவரை முரசொலி வாழ்த்தி வணங்குகிறது.**

கழக மூத்த முன்னோடி கோ.தட்சிணாமூர்த்தி அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களின் துணைவியார் தயாளு அம்மையாரின் மூத்த சகோதரர் ஆவார். இவர் தமது இளமைக் காலந்தொட்டு கழகத்தில் ஈடுபாடு கொண்டவர். கோ.தட்சிணாமூர்த்தி அவர்கள் கழகத்தின் மூத்த உறுப்பினரும் கோவில் திருமாளம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவராகவும், மாவட்ட வேளாண் ஒழுங்குமுறை விற்பனை குழுவின் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர் ஆவார். இவர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் தன்னை பங்கு எடுத்துக் கொள்ள செய்தவர் ஆவார்.

குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்று சிறைவாசம் அனுபவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கழகத் தலைவர் தளபதி அவர்கள் கைகளால் பொற்கிழி பெற்றவர் என்பதும் கூடுதல் சிறப்பாகும்.

திருமாளம் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களைப் பற்றி மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் தனது நெஞ்சுக்கு நீதி புத்தகத்தில் பக்கம் 241ல் நீண்ட நினைவுகளை பதிவு செய்திருப்பது மேலும் பெருமைக்கு உரியதாகும்.

கோ.தட்சிணாமூர்த்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி அவருக்கு 'முரசொலி' பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து மகிழ்கிறது.

## திருவண்ணாமலை நகரில் கலைஞர் நூற்றாண்டு விழா!

# பெண்கள் படித்தால்தான் குடும்பம், சமூகம் உயரும்!

## நலஉதவிகள் வழங்கி அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!



திருவண்ணாமலை, நவ. 14 -

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய மும்மூர்த்திகளும் பெண்கள் படித்தால்தான் குடும்பம் உயரும், சமூதாயம் உயரம் என்று பெண்கள் முன்னேற்றத்திற்காக பாடுப்பட்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புதுமைப்பெண் என்ற திட்டத்தினால் பெண்களை கல்லூரி வரை படிக்க வைத்திருக்கிறார் என்று திருவண்ணா மலையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு நலஉதவிகள் வழங்கி பேசும் போது குறிப்பிட்டார்.

10.11.2023 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு, திருவண்ணாமலை, வேட்டவலம் சாலை லீபலனன் பங்களாவில் இரண்டாம் கட்டமாக 38வது வார்டில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நகரில் உள்ள 10வார்டு பொதுமக்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் தலைமை வகித்தார்.

நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு பிரபு, ஹக்கிம்சேட் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகரமன்ற உறுப்பினர் ஹேமாசசிக்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு 10 வார்டு பொதுமக்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

திருவண்ணாமலை மாவட்டம் எப்போதெல்லாம் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போது தான் வளர்ச்சி அடைந்திருக்கிறது. நூற்றாண்டு விழா காணும் கலைஞர் ஆட்சியில்தான் இந்த மாவட்டத்திற்காக அற்புதமான வளர்ச்சி திட்டங்கள் கிடைத்திருக்கிறது. நவீன தமிழகத்தின் சிற்பியான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா, இங்கு நகர தி.மு.க. சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டுவருகிறது. தமிழ்நாட்டினை ஐந்து முறை சிறப்பாக ஆண்டவர் தலைவர் கலைஞர்.

முன்பெல்லாம் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் வேலூருக்கு செல்ல வேண்டும். ஒரு நாள் முழுவதும் இதற்காக செலவிட வேண்டியிருக்கும். இதை மாற்றி திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனி மாவட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தந்தது யார்? நமது உயிரனைய தலைவர் கலைஞர் தானே.

நோய் தீர்க்க வேலூருக்கும், பாண்டிச்சேரி மருத்துவமனைக்கும் அலைந்து கொண்டியிருந்த காலத்தை மாற்றி, திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையினை தந்தது யார்? நமது தமிழினத்தலைவர் கலைஞர் தானே. முன்பு விழுப்புரம் போக்குவரத்து கழகத்தில் தான் நமது மாவட்ட போக்குவரத்து கழகம் இருந்தது. அதை தனியாக பிரித்து திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனி போக்குவரத்துக் கழகம் தந்தவர் கலைஞர் தான். அந்த முத்தமிழறிஞர் கலைஞருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. தலைவரின் பிறந்தநாளை வெறும் கொண்டாட்டமாக இல்லாமல். பொதுமக்களுக்கு உதவும் வகையில் இங்கு நல உதவிகள் வழங்கி கொண்டாடப்படுகிறது.

இதை தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞரை போன்று மக்கள் தொண்டு முதன்மையானதாக கருதி நமது திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காக கட்டணமில்லா பேருந்து, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, அரசு கல்லூரியின் பயிலும் மாணவிகளுக்கு புதுமை பெண் திட்டம் மூலம் மாதம் ரூ. 1000 என தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்காக அயராமல் பாடுப்பட்டு வருகிறார். அவர் கரத்தை வலுப்படுத்துவோம்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

விழாவில் கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநில தொ.மு.ச செயலாளர் க.சௌந்தரராஜன், சிவ.ஜெயராஜ், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ஏ.ஏ.ஆறுமுகம், பச்சையம்மன் முத்து, பாலமுரளி கிருஷ்ணா, கு.கணேஷ், கற்பகம் சரவணன், வழக்கறிஞர் என் முரளி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் மின்னல் கமல், ஏ.வெங்கட், ராயல் தியாகு, கே.கந்தன், எஸ்.சமயராஜ், ஆர்.வெங்கடேஷ், அ.மோகன்ராஜ், டி.என்.பி.வினோத்குமார், ஏ.எம்.பாஷா, ஜாகீர் உசேன், அருண், வட்ட செயலாளர் சி.கே.சசிகுமார், மனோகர், கே.சசிகுமார், லலிதா ஆனந்த், சரவணன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக வட்டபிரதிநிதி கே.வெங்கட் நன்றி கூறினார். முன்னதாக செல்லங்குப்பம்சுப்பிரமணியின் நாட்டுப்புற பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

## நன்னியூர் ராஜேந்திரன் தலைமை! இல.பத்மநாபன் வாழ்த்துரை!

# மேற்கு மண்டல நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர்கள் க.பொன்முடி - மு.பெ.சாமிநாதன் - ஆர்.காந்தி சிறப்புரை!

திருப்பூர், நவ. 14-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி கோவை தெற்கு, கோடை வடக்கு, கோவை மாநகர், திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்தியம், தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, நீலகிரி உள்ளடக்கிய மேற்கு மண்டல நெசவாளர் அணி மாவட்ட மாநகர, தலைவர், துணைத் தலைவர் மற்றும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம் நாளை (15.11.2023 - புதன் கிழமை) காலை 10.00 மணியளவில் கலைஞர் அறிவாலயம், பலவஞ்சி பாளையம் பிரிவு, திருப்பூர் - 08 எனும் முகவரியில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமை வகிக்கிறார்.

ஓ.ஏ.நாகலிங்கம், க.பழனிச்சாமி, காஞ்சி தி.அன்பழகன், பரணி கே.மணி, நெல்லை, சொ.பெருமாள், சிந்து ரவிச்சந்திரன், வசந்தம் ஏ.சி.ஜெயக்குமார், ஜி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, மு.கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.எல்.டி.ப.சச்சி தானந்தம் வரவேற்கிறார். கே.எம்.நாகராஜன் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, மு.பெ.சாமிநாதன், ராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் வாழ்த்துரை வழங்குகிறார். கே.எஸ்.பி.ராஜேந்திரன் நன்றி கூறுகிறார்.

இக்கூட்டத்தில் அனைத்து நிர்வாகிகளும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தலைமை கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## நெல்லை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநகர - பகுதி - ஒன்றிய - பேரூர்

# கழகச் செயலாளர்கள் - பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!



நெல்லை, நவ.14 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (14.11.2023 செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு பாளையங்கோட்டை பி.பி.எல். திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற உள்ளது என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது,

நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (14 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை) காலை 10 மணிக்கு பாளையங்கோட்டை பி.பி.எல். திருமண மண்டபத்தில் மாவட்ட அவை தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் மாநில மகளிர் அணிச் செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், ஞானதிரவியம் எம்.பி.மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்குகின்றனர்.

ஆகவே மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக செயலாளர்கள் மற்றும் பாகமுகவர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய தொழிற்சாலைகளில்

# பெண் ஊழியர்களை அதிகம் கொண்ட முதல் மாநிலம் தமிழ்நாடு!

## 'தி இந்து' ஆங்கில நாளிதழ் சிறப்புக் கட்டுரை!

சென்னை, நவ. 14 -

இந்தியாவில் தொழிற்சாலைகளில் பெண் ஊழியர்களை அதிகம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதைப் பாராட்டி 'தி இந்து' நாளிதழ் சிறப்புக் கட்டுரை வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டின் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளே இதற்கு காரணம் என்று 'தி இந்து' ஆங்கில நாளிதழ் பாராட்டியுள்ளது.

*Where women elevate shop floors* என்ற தலைப்பில் 'தி இந்து' நாளிதழ் வெளியிட்டுள்ள கட்டுரையில், இந்தியாவில் உற்பத்தித் துறையில் பணிபுரியும் பெண்களில் 43 சதவீதம் பேர் தமிழ்நாட்டில் உள்ளதாகவும், மின்சார வாகனங்கள், பேட்டரி, மின்னணுப் பொருட்கள், சூரியசக்தி மின்தகடுகள் உற்பத்தி மற்றும் பாரம்பரிய தோல், ஜவுளி, ஆட்டோமொபைல் துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் பெண்களை அதிக அளவில் பணியமர்த்தி உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்றியத் தொழிலாளர் அமைச்சகம் வெளியிட்ட 201920ம் ஆண்டுக்கான தொழிற்துறை புள்ளி விவரங்களின்படி, இந்திய அளவில் தொழிற்சாலைகளில் 15 லட்சத்து 80 ஆயிரம் பெண்கள் வேலை செய்வதாகவும், இவர்களில் 6 லட்சத்து 79 ஆயிரம் பேர் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்வதாகவும், இந்திய அளவில் மொத்தமுள்ள பெண் தொழிலாளர்களில் இது 43 சதவீதம் என்றும் தேசிய சராசரியைவிட இது அதிகம் என்றும் 'தி இந்து' ஆங்கில நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

பெண்களின் தைரியமும், அவர்களுக்கு குடும்பத்தினர் அளித்து வரும் ஆதரவும், அதிக அளிவில் பெண்கள் வேலைக்கு செல்ல காரணமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ள 'தி இந்து' நாளிதழ் , தமிழ்நாட்டில் உள்ள ஆலைகளில், பெண்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பான சூழல் உள்ளது இதற்கு முக்கியக் காரணம் என்றும், டைட்டன் நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு இணைந்து தொடங்கிய தொழிற்சாலையில், பெண் தொழிலாளர்களை தேர்வு செய்து, பயிற்சி அளிப்பது போன்ற முன்மாதிரித் திட்டங்கள் நல்ல பயன் அளித்துள்ளதாகவும், இவ்வாறு வேலை வாய்ப்பு பெற்ற பெண்களின் பிள்ளைகள் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உயர்கல்வி கற்று தற்போது நல்ல நிலையில் உள்ளதாகவும் சுட்டிக் காட்டி உள்ளது.

இதேபோல், ஓலா பியூச்சர் தொழிற்சாலையில் 3 ஆயிரம் பெண்கள் பணிபுரிவதாகவும், அவர்களில் பெரும்பாலானோர் பொறியியல் டிப்ளமோ மற்றும் அறிவியல் பட்டம் பெற்றவர்கள், அவர்கள் அனைவரும் 22 24 வயதிற்கு உட்பட்டவர்கள் என்றும் The Hindu நாளிதழ் குறிப்பிட்டுள்ளது. ஒசூரில் உள்ள அசோக் லேலண்ட் தொழிற்சாலையில் முற்றிலும் பெண்களால் இயக்கப்படும் தனிப்பிரிவு செயல்பட்டு வருவதையும் 'தி இந்து' நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

டாடா எலக்ட்ரானிக்ஸ், டாடா பவர், ஏதர், பாரத் நியூ எனர்ஜி, க்ரீவ்ஸ் எலக்ட்ரிக் மொபிலிட்டி, மற்றும் ஐபோன்களை உற்பத்தி செய்யும் ஃபாக்ஸ்கான் மற்றும் பெகாட்ரான் நிறுவனங்களும் பெண்களை அதிக அளவில் வேலைக்கு அமர்த்தியுள்ளதையும் இக்கட்டுரை சுட்டிக்காட்டி உள்ளது. சென்னை உள்ளிட்ட நகரங்களில் உள்ள உட்கட்டமைப்புகள், பாதுகாப்பான போக்குவரத்து மற்றும் விடுதிகள், உயர் கல்விக்கான வசதிகள் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள அடிப்படை வசதிகள் மற்றும் பாலியல் தொல்லைகளை தடுப்பதற்கான ஏற்பாடுகள் பெண்களின் வேலைவாய்ப்புக்கான மையமாக தமிழ்நாட்டை மாற்றி உள்ளதாகவும், இதன் காரணமாக கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கி வரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் 'தி இந்து' ஆங்கில நாளிதழ் பாராட்டியுள்ளது.


## சென்னையில் 150 டன் பட்டாசு கழிவுகள் அகற்றம்!

சென்னை, நவ. 14-

தீபாவளி பண்டிகை முடிந்த நிலையில் தமிழகம் முழுவதும் டன் கணக்கில் பட்டாசுக் கழிவுகள் குவிந்துள்ளன. இந்த நிலையில் சென்னையில் பட்டாசுக் கழிவுகளை அகற்றும் பணியில் 19,600 தூய்மைப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களிலும் பட்டாசுக் கழிவுகளை சேகரிக்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கழிவுகளை கொண்டு செல்வதற்காக மண்டலத்திற்கு 2 வாகனங்கள் என மொத்தம் 30 வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை முதலே பட்டாசுக் கழிவுகளை அகற்றும் பணியில் மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டு வந்த நிலையில், சென்னையில் இதுவரை 150 டன் பட்டாசுக் கழிவுகள் அகற்றப்பட்டு இருப்பதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வலைதளங்களில் வலம் வருவது!



# கலைஞர் இயக்கவியல் : கழகத் தலைவர்

ஓவியம் : ரவி பேலட்

நீரை.மகேந்திரன்



மாபெரும் மக்கள் திரள் கட்சியை வழிநடத்திய கலைஞர், தனது இறுதிக் காலம் வரை இயங்கிக் கொண்டே இருந்தவர் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அந்த இயக்கம் எத்தனை பன்முகத்தன்மை கொண்டது என்பது, அவரைக் கற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு வியப்பளிப்பவை. அந்த இயக்கத்தில் உச்சபட்ச வியப்பாக நான் அறிவது, மிசா காலத்துக்குப் பின்னர் தொண்டர்களோடு அவர் கொண்டிருந்த உணர்வுபூர்வமான பிணைப்பு.

“...‘உடன்பிறப்பே’ என்று கடிதத்தை எழுதத் தொடங்கும் போதெல்லாம் இதயத்தின் ஒரு பகுதியில் பேரன்பு பீரிட்டுக் கிளம்பும். இன்னொரு பகுதியில் பாச உணர்வு அலைகள் மோதும். அவை இரண்டறக் கலந்த பிறகே ‘உடன்பிறப்பே’ என்ற வார்த்தை வடிவம் கொள்ளும்...” என உடன்பிறப்புக்குக் கடிதம் எழுதுவதைக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

உடன்பிறப்பே என எழுதும் நேரத்தில் அவர் அடையும் மனக்கிளர்ச்சியை மேடைகளில் ‘உடன்பிறப்பே’ என அவர் உச்சரிக்கும் நொடியில் தொண்டர்களிடம் காண முடியும். அந்த ஒரு சொல் எழுப்பும் ரசவாதம் அனுபவித்தவர்களால் மறக்கவியலாத நினைவுகளாக இருக்கும்.

## கொள்கை உறவுகள்

வழிகாட்டுதல்களால் மட்டும் தலைவனாக இயங்கியவரல்ல. கழகக் குடும்பங்களின் ‘நல்லது கெட்டதுகளுக்கும்’ உடன் நிற்பவராக இருந்தார்.

மிசா கைதிகளாகச் சிறையில் இருந்தவர்களில், வசதியற்ற குடும்பத்தினருக்கு மாதந்தோறும் பண உதவி செய்ய வேண்டும் என முனைகிறார். 1977-ஆம் ஆண்டு ஜனவரி 24-ஆம் தேதி ‘முரசொலி’ வெளியிட்ட ஒரு செய்தியின்படி 1 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் கழகத் தொண்டர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 1977-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கருப்புக் கொடி போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அப்போது திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் புயல் தாக்கி பெரும் பொருட்சேதமும் உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டன. கழகத்தினர் நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டும் என சிறையில் இருந்தவாறே வேண்டுகோள் விடுக்கிறார். அதுமட்டுமல்ல, சிறை முகவரியிலேயே நிவாரண நிதி திரட்டுகிறார். அப்படி அவர் பெயரில் சிறைக்கு வந்த மணி ஆர்டர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தாண்டியது.

## கழகம் காக்க

1977-ஆம் ஆண்டு, அவர் கட்சியில் இருந்து விலக வேண்டும் என சிலரால் நெருக்கடி கொடுக்கப்பட்டது. கழகம் நிலைத்திருக்க வேண்டும் எனில், நான் விலகிக் கொள்ளவும் தயார் என்கிறார். அதுகேட்டு கோபாலபுரம் வீடு, ‘முரசொலி’ அலுவலகம் என திரண்டு நின்ற கழகத்தினர் மூச்சு முட்ட கதறி நின்றனர்.

“அதை இப்போது நினைத்தாலும் என் உள்ளம் உருகுகிறது, எள் விழவும் இடமின்றி வீட்டுக்குள்ளும் தாழ்வாரத்திலும் கூடத்திலும் வாசலிலும் நிரம்பியிருந்தோர் விட்ட மூச்சுக் காற்று புகையாகவே மாறி மார்கழி மாதத்துப் பனிமூட்டம் போல் சூழ்ந்து கொண்டது” என அந்தச் சூழலைச் சொல்கிறார். அவர் விலகலை திரும்பப் பெறுகிறேன் என சொல்லும் வரை அந்தச் சூழல் நீடித்தது.

தலைமைக்கும், அணிகளுக்குமான இப்படியான பிணைப்புகள்தான் தி.மு.க.வின் உயிரோட்டமான இயக்கத்தின் அடிநாதமாக இருந்தன.

## புத்தாக்க முயற்சியாக அணிகள்

தேர்தல் வெற்றி தோல்விகளில் ஏற்ற இறக்கம் இருந்தாலும், கழகத்தின் அடித்தளத்தை வலுவாக்கப் புதிய வழிகளையும் உருவாக்குகிறார். தி.மு.க.வின் புத்துயிர்ப்பாக அவை உருவாகின. அணிகள் உருவாக்கம் அரசியலில் அவர் கையாண்டு பார்த்த புத்தாக்க முயற்சி எனலாம்.

முதலில் தி.மு.க.வின் இலக்கிய அணி. 1977 ஆம் ஆண்டிலிருந்து முறையாகச் செயல்படத் தொடங்கியது. “தமிழ் மொழி, இன உணர்வு, தமிழர் கலாச்சாரம், வரலாறு இவற்றுடன் பகுத்தறிவு பரப்பும் பணியை மேற்கொள்ள இலக்கிய அமைப்பு வேண்டும் “ என அதைத் தொடங்குகிறார்.

அடுத்த தலைமுறையினர் புதிய உற்சாகத்துடன் சுழல்வதை முறைப்படுத்த இளைஞர் அணியை உருவாக்குகிறார். மதுரையில் 1980-ஆம் ஆண்டு நடைபெற்ற அதன் தொடக்கவிழா தமிழ்நாட்டுக்கே திருவிழா கொண்டாட்டமாக இருந்தது. இளைஞர்கள் அரசியல் பயிற்சி பெற அவர் திட்டமிட்ட அந்த ஏற்பாட்டில் இருந்து வளர்ந்து வந்தவர்தான் நமது இன்றைய முதலமைச்சர்.

## பயணங்கள்... பாதைகள்...

அந்த 13 ஆண்டுகளில், கலைஞரின் பிரச்சாரப் பயணங்களை சாகசப் பயணத்துக்கு நிகராக ஒப்பிடலாம். 1951-ஆம் ஆண்டு ஒருமாத கால தொடர் பொதுக்கூட்டம் காரணமாக அவரை ப்ளூரசி நோய் தாக்கியபோதும் அவர் துவண்டதில்லை. கொண்ட கொள்கையை இரண்டு முறை அரியணை கொண்டு சென்ற பின்னரும், அதே வேகம்தான்.

1977-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். மாவட்டக் கழகச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் ஒரே நாளில் 75 நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைத்தார் என ‘நெஞ்சுக்கு நீதி’ மூன்றாம் பாகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

1977-ஆம் ஆண்டு கருப்புக் கொடி போராட்டத்தின் சிறை வாசம் முடிந்து டிசம்பர் 8 ஆம் தேதி விடுவிக்கப்படுகிறார். அடுத்த இரண்டு நாட்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்க டெல்டா மாவட்டங்களுக்குப் பயணப்பட்டார்.

1982-ஆம் ஆண்டில், திருச்செந்தூர் நீதி கேட்டு நடைபயணம். 200 கிலோமீட்டர் தூரம் நடந்து கால்களில் ஏற்பட்ட புண்கள் ஆறாத நிலையில், அடுத்ததாக தஞ்சை மாவட்ட ஆறாவது மாநாடு, அதன் தொடர்ச்சியாக குளித்தலையில் அறிவிக்கப்படாத மற்றொரு மாநாடு. இப்படி தமிழ்நாட்டின் குறுக்கும் நெடுக்கும் இடைவிடாத பயணம் செய்த தலைவர் அவரைப்போல யாருமில்லை. ஒரு வருடத்தில் சராசரியாக இரண்டு முறையாவது நெல்லை, மதுரை, திருச்சி, கோவை, தஞ்சை, என பொதுக்கூட்டம், மாநாடு என திட்டமிட்டிருக்கிறார்.

“உடன்பிறப்பே இன்று சுற்றுப்பயணம் மேற்கொள்கிறேன். உன் சுடர் விழிகளைக் கண்டு களிப்பேன். நீ சுழலும் பம்பரமாக தேர்தல் பணி ஆற்றுவதை நேரிலேயே பார்த்து மகிழ்வேன். நான் உன்னை அடிக்கடி கேட்டுக் கொண்டதைப் போல் இப்போதும் கேட்டுக்கொள்கிறேன், பாசமிகுதியால் என்னை தயவு செய்து பந்தாடாதே; குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை தவிர நீ கூப்பிட்ட இடத்திற்கு எல்லாம் வந்தே தீர வேண்டும் என்று பிடிவாதம் செய்யாதே” என குழந்தை கண்டிப்புடன் ஒரு கடிதத்தைப் படித்து பரவசப்படாத தொண்டன் இருக்க முடியுமா?

## காப்பரண்கள்

1978-ஆம் ஆண்டு மதுரையில் ஒரு நிகழ்ச்சிக்காக கலந்து கொள்ளச் செல்ல திட்டமிடுகையில், அவருக்கு எதிராக கருப்புக் கொடி காட்டப்படும் என சிலர் அறிவித்தனர்.

அதை ஒட்டி ஒரு கடிதம் எழுதுகிறார்” உயிர் வெள்ளமென கருதுகிறவன் பொது வாழ்வுக்கு தகுதியற்றவன் என்று போதித்த பெரியாரின் தொண்டன் நான். எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்ற பேரறிஞர் அண்ணாவின் தம்பி நான். விழுப்புண்களை விரும்பி ஏற்று மனம் தளராது கழகம் நடத்தும் உன்னை உடன்பிறப்பாக பெற்றவன் நான்” என தொண்டர்களுக்கு கடிதம் எழுதிவிட்டு மதுரை செல்கிறார்.

‘என் தலைவனுக்கு யார் கருப்புக் கொடி காட்டுவது?’ என தென்மாவட்ட கழகமே திரண்டு நின்றிருந்தது. கட்டுக்கடங்காத கூட்டம் மாபெரும் நெருப்பு என்பதையும் அவர் அறிவார். அந்த எழுச்சியைத் தனது அன்பால் கட்டினார்.

‘‘நெல்லை மாவட்டத்தில் இருந்து ஆயிரக்கணக்கான வாஞ்சிநாதன்கள் வந்திருக்கிறோம் என்கிறார் வைகோ.” “தேவை வாஞ்சிநாதன்கள் அல்ல வாஞ்சைநாதன்கள். என் மீது வாஞ்சை கொண்ட நாதன்கள் மட்டுமல்ல, கொள்கையில் பற்று கொண்ட வாஞ்சைநாதன்கள் தேவை” என ஆற்றுப்படுத்துகிறார்.

1986-‘ஆம் ஆண்டு மதுராந்தகத்தில் ஒரு பொதுக்கூட்டம். அப்போது கலைஞர் மீது வீசப்பட்ட ஒரு ஆசிட் பாட்டில் கீழே விழுந்து உடைகிறது. அதைக் கண்டு வெகுண்டெழுந்த மதுராந்தகம் ஆறுமுகம் “அவர்கள் யாரெனப் பார்த்து வருகிறேன்” என்னை அனுமதிக்க வேண்டும் என்கிறார்.

“எதையும் அமைதியோடு சந்திப்போம், அவர்கள் கல்லை எரியட்டும், நாம் சொல்லால் அவர்களைச் சந்திப்போம். அவர்கள் கத்தியை வீசட்டும், நாம் நமக்குள்ள புத்தியால் அதை சந்திப்போம். அவர்கள் திராவகத்தை வீசட்டும், நாம் நமக்குள்ள திறமையால் அதைச் சந்திப்போம். அவர்கள் கண்ணாடித் துண்டுகளை நம் மீது வீசட்டும், நாம் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தால் சந்திப்போம்” என்கிறார். அதனால்தான் அவர் தலைவர்.

## திராவிட இயக்க இதழ்கள் - காஞ்சி



1964 ஜூலை 26 முதல் வெளி வந்த இதழ் ‘காஞ்சி’. ‘இவர்தான் ஆசிரியர்’ என்று விளக்கத் தேவை யில்லாதபடிக்கு, இதழின் பெயரே ஆசிரியர் பெயரைச் சொல்லும். ஆம், பேரறிஞர் அண்ணாதான் ஆசிரியர். 1942 முதல் தொடர்ந்து தனது பணியினை செவ்வனே செய்து வந்த, அண்ணா ஆசிரியராக இருந்த ‘திராவிட நாடு’ எனும் வார இதழ் 1963 இல் நின்றுவிட்டது. அதற்கு அண்ணா கூறிய காரணம், “எனக்கு எழுத நேரமும் நினைப்பும் கிடைக்க வில்லை என்பதுமல்ல; எழுதுவதால் களைப்பும் இளைப்பும் ஏற்பட்டுவிட்டது என்பதுமல்ல; இதழ் நடத்தும் நிர்வாகப் பொறுப்பினைப் பார்த்துக் கொள்ள, முட்டுப்பாடின்றி நடத்திச் செல்ல, எனக்கு நேரம் கிடைக்காததும் அதன் காரணமாக ஏற்பட்ட, பொருளாதார நெருக்கடியும்” என்றார்.

மேலும் அவர், “பல்வேறு காரணங்களால், ‘திராவிட நாடு’ என்ற பெயருடன் இதழ் நடத்த துரைத்தனம் அளித்திருந்த அனுமதி காலாவதி ஆகிவிட்டது. மீண்டும் அதே பெயருடன் இதழ் நடத்த துரைத்தனத்தாரை அணுகும் முயற்சி நடைபெற்ற வண்ணம் இருக்கிறது... அதற்கான உத்தரவு கிடைத்திட எத்தனை காலமாகுமோ யார் கண்டார்கள்!

துரைத்தனத்தாருக்குத்தான் என்மீது அளவு கடந்த அன்பாயிற்றே!! அறிவாயே! அதனால், நான் சிறையில் இருந்தபோது, என் இளைய மகன் இளங்கோவன், ‘காஞ்சி’ எனும் பெயரில் கிழமை இதழ், இலக்கிய இதழ் நடத்த - பெற்றிருந்த அனுமதியைப் பயன்படுத்தி, என் பணியினைத் தொடர்ந்திட முனைகின்றேன். ‘திராவிட நாடு’ இதழ் நடத்த துரைத்தன அனுமதி கிடைத்ததும், அந்தப் பெயருடன் இதழ் வெளிவரும்! ‘காஞ்சி’ இலக்கிய இதழாகிவிடும்” என்றார்.

தொடர்ந்து 1964 முதல் ‘காஞ்சி’ இதழ் வெளிவரத் தொடங்கியது. பொங்கல் சிறப்பு மலர்களும் வெளிவந்துள்ளன.

## :ப்ளாஷ்பேக்





சண்முகம்

### வெயிலில் வாக்குச் சேகரிப்பு!

1978-ஆம் ஆண்டு மதுரை மாநகர் மன்றத் தேர்தல் நடைபெற்றது. மதுரை 17-வது வட்ட தி.மு.கழக வேட்பாளராகத் தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடும் வாய்ப்பை வட்டச் செயலாளராக இருந்த எனக்கு தலைவர் கலைஞர் வழங்கி இருந்தார். பயங்கர வெயிலில் குடை பிடிக்கலாமா என்று கேட்டதற்கு “அது இன்னொரு வேட்பாளருடைய சின்னம் யா! அதெல்லாம் வேண்டாம்” என்று சொல்லி வெட்ட வெயிலில் வாக்குச் சேகரித்த நிகழ்ச்சி என் மனதை விட்டு இன்று வரை அகலவே இல்லை. உடன் அன்றைய மதுரை மாவட்டக் கழகச் செயலாளர் பொன்.முத்துராமலிங்கம், நகரச் செயலாளர் காவேரி மணியம் ஆகியோர்.

**-எம்.பி.சண்முகம்,**
**அவைத் தலைவர்,**
**சிம்மக்கல் பகுதி, மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### லண்டனில் ஆர்ப்பாட்டம்!

**1977 -ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கலைஞர் மற்றும் கழக முன்னணியினர் சிறையில் இருந்து விடுதலை யாவதற்கு அப்போதைய அரசு முட்டுக் கட்டை போட்டது. கழகத்தினரை விடுதலை செய்ய வேண்டும் என சென்னை மாநகரிலும், தமிழ்நாட்டின் பல இடங்களிலும் தொடர் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. இலங்கையில் யாழ்ப்பாணம் நகரில் மாபெரும் பேரணி நடத்தி தூதரகத்தில் மனு அளிக்கப்பட்டது. கலைஞரை விடுதலை செய்ய வேண்டும் என இலண்டன் மாநகரில் வாழும் தமிழர்கள் சுமார் 7 மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக ஏடுகள் செய்தி வெளியிட்டன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 299




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131